"எச்.எம்.வி."

HIS MASTER'S VOICE

சிறந்த சங்கீதம் + சரிய ஒலிப்பதிவு

புதிய ரிகார்டுகள்



ஸ்ரீமதி என். ஸி. வஸந்தகோகிலம்

N. 18249
{ சித்திரையில் வந்து
{ வருவானோ வனக்குயிலே

சங்கீத வித்வான்
சிதம்பரம் ஜெயராமன்

N. 18245
{ கலையை பழிக்காதே
{ இன்னமும் சொல்லவோ

கே. ஸி. தியாகராஜன் &
ஸ்ரீமதி டி. எஸ். பகவதி

N. 18216
{ யாரோ அரசன் ?
{ யாரோ கள்வன்

''சிலப்பதிகாரத்''திலிருந்து காட்சி

★

எச்.எம்.வி. ஹைபிடெலிடி ஊசிகள்



தி கிராமபோன் கம்பெனி
லிமிடெட்.
— மதராஸ் —

எல்லா ''எச்.எம்.வி.'' கிராமபோன் வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

கல்கி
பொருளடக்கம்

மலர் 4
இதழ் 33

1945 மார்ச் 25

தாரண ௵
பங்குனி 12

** கல்கியில் வெளிவரும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

ஸர் தேஜ்பகதூர் சப்ரு வடநாட்டில் மிகப் பிரபலமான வக்கீல்; சமீபத்தில் ஒரு வழக்கில் பேசுவதற்காகச் சென்னைக்கு விஜயம் செய்திருந்தார். அதற்காக அவரை நமது அட்டைப் படத்தில் போடவில்லை.

ஸர் தேஜ்பகதூர் மிதவாத அரசியல் பிரமுகர்; இந்திய சர்க்காரின் நன்மதிப்புக்குப் பாத்திரமாகி, நிர்வாக சபையில் அங்கத்தினரா யிருந்து, ஸர் பட்டம் பெற்றவர்; அதற்காக அவருடைய படத்தை நமது அட்டையில் போடவில்லை.



ஸர் தேஜ்பகதூர் தேசத்துக்குச் சிறந்த சேவை செய்திருக்கிறார். மிக நெருக்கடியான தருணங்களில் காங்கிரஸுக்கும் சர்க்காருக்கும் தூது சென்று ராஜி செய்து வைத்திருக்கிறார். இதற்காகவெல்லாம் அவருடைய படத்தை நாம் போடவில்லை.

தீராத ஹிந்து-முஸ்லிம் பிரச்னையைத் தீர்த்து வைத்து, தற்போதைய அரசியல் நெருக்கடியை நிவர்த்தி செய்ய ஸர் தேஜ்பகதூர் சமீபத்தில் செல்வாக்கு வாய்ந்த பிரமுகர்கள் அடங்கிய சமரசக் கமிட்டி ஒன்றை ஏற்படுத்தி யிருக்கிறார். இதனால் தேசத்துக்கு அரசியல் விமோசனம் ஏற்படலாம் என்றே பலர் நம்புகிறார்கள். இதற்காகவும் அவருடைய படத்தை நமது அட்டையில் வெளியிடவில்லை.

ஆனால், மன்னர், நமது சென்னை நகரசபையின் வரவேற்பு உபசாரத்தை 'வேண்டாம்' என்று மறுத்துவிட்டு, ரயில் ஏறிச் சென்றாரே, அதற்காக அவர் பேரில் நமக்கு ஏற்பட்ட அபார நன்மதிப்புக்கு அறிகுறியாகவே இந்த இதழ் அட்டையில் ஸப்ருவின் படத்தை வெளியிட்டிருக்கிறோம்.

மகா மகா மட்டமாயும், சிறிதும் மதிப்பற்றதாயும் போய்க்கொண்டிருக்கும் 'சென்னை நகரசபை உபசாரம்' இதன் மூலமாகவாவது சிறிது அவமான மடைந்து கொஞ்ச நாளைக்கு வெளியில் தலை காட்டாம லிருந்தால் மிக மிக விசேஷமா யிருக்கும்.

I.A.F க்கு நிர்வாக அதிகாரிகள் அவசியமாக தேவை



கமிஷண்ட் ஆபீசர்கள் அல்லாதவர்களுக்கு I.A.F. ஒரு புதிய கிளை ஸ்தாபனத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இந்த கிளை உன்னத பயிற்சியையும் அனுபவத்தையும் கொடுக்கிறது. அதனால் அனேகர் சிவில் வாழ்க்கையில் வெற்றியடைய தகுதியுள்ளவர்களாகுகிறார்கள். I.A.F. நிர்வாக அதிகாரிகள் இந்திய விமானிகளின் நிர்வாகம், நலன்களை கவனிக்கும் கமாண்டிங் ஆபீசர்களுக்கு உதவியளிக்கக் கூடிய பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தை செய்யவேண்டும். யுத்தத்திற்குப் பிறகு I.A.F. வேலை இல்லாதவர்களுக்கு சர்க்கார் உத்தியோகம் பெற நல்ல சந்தர்ப்பமுண்டு. ஏனெனில் சர்க்கார் தங்கள் ஆதிக்கத்திலிருக்கும் அனேக வேலைகளை யுத்தத்தில் வேலை செய்தவர்களைக் கொண்டு பூர்த்தி செய்வதாக ஏற்றுக்கொண்டிருக்கின்றனர்.

யோக்யதாம்சங்கள்

படிப்பு: குறைந்தபக்ஷம் இந்திய பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவராய் இருக்கவேண்டும். வயது 20-லிருந்து 38-க்குள். மெடிகல்: வியாதியில்லாமலும் மெடிகலாக தகுதியுள்ளவராயும் இருக்கவேண்டும். அந்தஸ்து: வேலைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டவர்கள் முதலில் 2-வது வகுப்பு ஏர்கிராப்ட்ஸ்மென்னாக பதிவு செய்துகொள்ளப்பட்டு டிரெயினிங்கிற்கு சேர்ந்ததும் ஆக்டிங் சார்ஜெண்ட் (சம்பளம் கொடுக்கப்பட்டவர்) அந்தஸ்திற்கு உயர்த்தப் படுவார்கள். சம்பள விகிதம்: ஆக்டிங் சார்ஜெண்ட் (சம்பளம் கொடுக்கப்பட்டவர்) மாதம் ரூ. 115 பிளைட் சார்ஜெண்ட் மாதம் ரூ. 130 வாரண்ட் ஆபீசர் மாதம் ரூ. 200. அடையக்கூடிய சலுகைகள்: எல்லா நிர்வாக அதிகாரிகளும் இலவசமாக ஆகாரம், உடுப்பு, இடவசதி, வைத்திய சிகிச்சை, பல் வைத்தியம் மேலும் இந்திய ஆகாயப் படையில் இருப்பவர்கள் அனுபவிக்கும் சௌகரியங்களையும் அலவன்ஸ்களையும் அடைகிறார்கள்.

விண்ணப்பித்துக்கொள்ளவேண்டிய முறை

சமீபத்திலுள்ள ரெக்ரூட்டிங் ஆபீஸுக்கு விஜயம் செய்யுங்கள் அல்லது எழுதுங்கள். கீழே அவைகளின் ஜாபிதா கொடுக்கப்பட்டிருக்கிறது

மதராஸ்: ... புதுப்பேட்டை லேன், மவுண்ட் ரோடு போஸ்டு.
பெங்களூர் H. Q: ... கப்பன் ரோடு.
திருச்சிராப்பள்ளி: ... மதுரை ரோடு.
பெஜவாடா: ... பந்தர் ரோடு.
வேலூர்: ... 15, ஆபீசர்ஸ் லேன்.
மைசூர்: ... காந்தி ஸ்கொயர்.

கல்கி

மலர் 4 } தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் { இதழ் 33

என்ன சேதி?

யாருக்குத் தூக்கு?

வைஸ்ராய் வேவல் சீமைக்குப் பறந்து போயிருக்கிறார். "ஜப்பான் யுத்தத்துக்கு இந்தியாவை முக்கிய தளமாக ஆக்குவது பற்றியும், இந்திய அரசியல் பிரச்னையைத் தீர்ப்பது பற்றியும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டுடன் ஆலோசிக்க வருகிறார்" என்று அமெரி துரை அறிவித்திருக்கிறார். நல்லது; ரொம்ப நல்லது; ஆகாயத்தில் அபாயம் மிகுந்த இந்த நாளில் வைஸ்ராய் வேவல் நல்லபடியாகப் போய்த் திரும்பட்டும்; அரசியல் பிரச்னை விஷயத்தை நன்றாக ஆலோசித்துப் பழமாகக் கொண்டு வரட்டும்.

ஆனால் வைஸ்ராய் வேவல் திரும்பி வரும்போது என்ன கொண்டு வருவார் என்பதைக் காட்டிலும், போகும்போது என்ன செய்து விட்டுப் போனார் என்பதைப் பற்றித்தான் நமக்குக் கவலை அதிகமாயிருக்கிறது. முக்கியமாக, குலசேகரப்பட்டணம் வழக்கு மன்னிப்புப் பத்திரத்தில் அவர் கையெழுத்துப் போட்டுவிட்டுப் போனாரா, இல்லையா?

இந்தச் சென்னை மாகாணத்தில், தமிழ் நாட்டில், ஏதாவது ஒரு விஷயத்தில் எவ்வித அபிப்பிராய பேதமும் இன்றிப் பொது ஜனங்கள் ஏகமனதான விருப்பத்தைத் தெரிவித்திருக்கிறார்கள் என்றால், அது காசிராஜன், ராஜகோபாலன் இவர்களுடைய உயிரைக் காப்பாற்ற வேண்டுமென்பதில்தான். மேற்படி இளைஞர்கள் விஷயத்தில் வைஸ்ராய் வேவல் தண்டனையை ரத்து செய்யாமலிருக்கும் பட்சத்தில், அது பொதுஜன வாக்கையும் கருணை என்னும் குணத்தையும் தூக்குப் போட்டுக் கொன்றதாகவே முடியும். அப்படிப்பட்ட விபரீதம் ஒருநாளும் நேராதென்று ஆசையுடன் நம்புகிறோம்.


சென்னையில் சுபிட்சம்

நாம் வசிக்கும் பாக்கியத்தைப் பெற்ற இந்தச் சென்னை மாகாணத்தில் எப்படிச் சுபிட்சம் கொழிக்கிறது என்பதைப் பார்க்கும்போது நமக்கு மூர்ச்சை போடும்போலிருக்கிறது. வரப்போகும் 1945-46ம் ஆண்டில் சென்னை சர்க்காருக்கு 41 கோடி ரூபாய் வருமானம் வரப்போகிறதாம். இதில் 30 கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்யச் சென்னை சர்க்காருக்கு வழி தெரியவில்லை. எனவே 11 கோடி ரூபாய் (சரியாகச் சொன்னால் 10 கோடி 80 லட்சம்) மிச்சமாகிறதாம். இதில் பத்து கோடி ரூபாயைத் தூக்கிக் 'கையிருப்பு நிதியில் போடு!' என்று சொல்லி விட்டார்களாம். நடை முதல் வருஷத்தில் 5½ கோடி ரூபாய் மீதமாகும் என்று எதிர்பார்த்தது போக, 12 கோடி ரூபாய் உண்மையில் மீதமாயிருக்கிறதாம். இந்தத் தொகையும் 'கையிருப்பு நிதி'யிலேதான் போய்ச் சரணாகதி அடையப் போகிறதாம். சென்னை அட்வைஸரி கவர்ன்மெண்டார் வெளியிட்டுள்ள வரவு செலவுத் திட்டத்திலிருந்து மேற்படி விவரங்களைத் தெரிந்து கொண்டு நாம் சந்தோஷத்தினால் இராத் தூக்கம் இல்லாமல் தவிக்கிறோம். அப்படித் தூங்கினாலும், மேற்படி 22 கோடி ரூபாய்க் கையிருப்பிலிருந்து இரண்டு மூன்று கோடியை இப்படி நம்மிடம் தள்ளி, "இந்தா! செலவு செய்ய வழிகாட்டு!" என்று சர்க்கார் கேட்பது போலக் கனவு கண்டு திடுக்கிடுகிறோம்.


குடி உயர்கிறது!

அட்வைஸரி கவர்ன்மெண்டின் ஆட்சியில் சென்னை மாகாணத்தில் சுபிட்சம் பொங்குகிறது. அதோடு

மாகாணங்களில் மீண்டும்



காங்கிரஸ் மந்திரி சபைகள் ஏற்பட்டால்..... உம்மன்



வரிகள் பெருகுகின்றன. அதோடு குடியும் உயர்கிறது! 1943—1944ம் வருஷத்தில் சென்னை மாகாணத்தில் குடியினால் வருமானம் 7 கோடி ரூபாய்; கடை முதல் வருஷத்தில் 13 கோடி ரூபாய்! வரப்போகும் வருஷத்தில் 14 கோடி ரூபாய் எதிர்பார்க்கப்படுகிறது! அடி சக்கை!—இந்தக் கள்ளரக்கனுடைய மகத்தான வெற்றியைக் கண்ணால் பார்த்துக் களிக்கக் கொடுத்து வைக்காமல் இவ்வுலகத்திலிருந்து அவசரப்பட்டுச் சென்ற 'புஸ்ஸிபுட்' ஜான்ஸனை எண்ணி இரங்குகிறோம்!

சத்தியமூர்த்தி வாரம்

இப்படியாகச் சென்னை மாகாணம் கபிட்சத்தில் மூழ்கித் தத்தளித்துக் கொண்டிருக்கும் சமயத்தில் இந்த மாகாணத்தின் முன்னேற்றத்துக்காக அல்லும் பகலும் அனவரதமும் பாடுபட்டு உழைத்துப் பிராணனையும் கொடுத்த தேசபக்த வீரர் ஸ்ரீ சத்தியமூர்த்தியை ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று சில அன்பர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். மார்ச்சு 28உ முதல் ஏப்ரல் 3உ வரையில் ஸ்ரீ சத்தியமூர்த்தி ஞாபகார்த்தமாகக் கொண்டாட வேண்டும் என்பது அவர்களுடைய யோசனை. ஸ்ரீ சத்தியமூர்த்தியின் வாரத்தை வெறும் பேச்சுத் தொண்டிலே மட்டும் கழித்துவிடாமல், அவருடைய ஞாபகார்த்த நிதிக்குப் பணம் திரட்டும் காரியத்திலும் ஈடுபடவேண்டுமென்று கோருகிறார்கள். இந்த யோசனைகளையெல்லாம் நாம் மனப்பூர்வமாக ஆதரிக்கிறோம்.

ஞாபகார்த்த நிதி

ஸ்ரீ சத்தியமூர்த்தி ஞாபகார்த்த நிதி வசூல் சுமார் ஒரு வருஷத்துக்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்டது. செல்வாக்கு வாய்ந்த பிரமுகர்கள் அடங்கிய கமிட்டி ஒன்றும் அதற்காக ஏற்பட்டிருக்கிறது. "ஹிந்து" பத்திராதிபர் ஸ்ரீ கே. சீனிவாசன் மேற்படி கமிட்டியின் பொக்கிஷதார். ஸ்ரீ வி. நாடிமுத்துப் பிள்ளை கமிட்டியின் காரியதரிசிகளில் ஒருவர். இப்பேர்ப்பட்டவர்கள் சேர்ந்து ஆரம்பித்த வேலை இன்னும் பூர்த்திபெறவில்லையென்பது சென்னை மாகாணத்துக்கே குறைவை அளிக்கக்கூடிய காரியம். "தேசத்துக்காக உழைத்து உயிரை விட்ட பெரியோர்களைச் சென்னை மாகாணத்தார் மதிக்கும் இலட்சணம் இதுதானா?" என்று மற்ற மாகாணத்தார் பரிகாசம் செய்வதற்கு ஏதுவாகும். சென்னை அட்வைஸரி கவர்ன்மெண்டாருக்குத் தேவையைக் காட்டிலும் பத்து கோடி ரூபாய் அதிக வரி கொடுத்து ஆதரிக்கும் சென்னை மாகாண வாசிகள், ஸ்ரீ சத்திய மூர்த்தியின் ஞாபகத்துக்காக ஒரு லட்சம் ரூபாய் கொடுப்பது ஒரு பெரிய காரியமா? சென்னைக் கவர்னரின் யுத்த நிதிக்கு மூன்றரைக் கோடி ரூபாய் கொடுத்துள்ள சென்னை வாசிகள், நியாயமாக மேற்படி ஸ்தானத்தை வகித்திருக்கக் கூடிய தேசபக்தத் தியாகிக்காக ஒரு லட்சம் ரூபாய் கொடுக்கக் கூடாதா?

வட்ட மேஜை

21—3—44

கல்கி ஆசிரியர் அவர்களுக்கு,

போன வார இதழில் மாணவர் இயக்கத்தைப் பற்றி நீங்கள் எழுதியிருக்கும் கட்டுரையைப் படித்தேன். அதில் ததும்பி நிற்கும் ஒற்றுமை ஆர்வத்தை மாணவர் சம்மேளனம் பரிபூரணமாக ஆதரிக்கிறது.

ஒரு சில விஷயங்களை மட்டும் தெளிவு படுத்த விரும்புகிறேன்.

மாணவர் சம்மேளனம் ஒரு ஜனநாயக ஸ்தாபனம். பலதரப்பட்ட அபிப்பிராயங்கள் சங்கமமாகும் சங்கம். காங்கிரஸ் லீக் ஒற்றுமை அமைக்க, தலைவர்களை விடுவிக்க, தேசிய சர்க்காரைக் கைப்பற்றுவதன் மூலம் பரிபூரண சுதந்திரம் எய்த மாணவர் சம்மேளன அங்கத்தினர்கள் பாடுபடுகிறார்கள். இதர பிரச்னைகளில் சம்மேளன சங்கத்தினர்களுக்குள் பல விதமான அபிப்பிராயங்கள் இருக்கலாம். யுத்தத்தின் தன்மையைப் பற்றி மாணவர் சம்மேளன அங்கத்தினர்களுக்கு வெவ்வேறு அபிப்பிராயமிருக்கலாம்.

இந்த யுத்தம் 'மக்கள் யுத்தம்' என்று மாணவர் சம்மேளனம் வரையறுத்துக் கூறவில்லை. இன்று அவ்விதம் செய்வது அநாவசியம். ஒற்றுமைக்குத் தடை என்பது சம்மேளனத்தின் அபிப்பிராயம்.

சம்மேளனத்தில் மாணவர்களால் போற்றப்படும் கம்யூனிஸ்ட் ஊழியர்கள் பலர் இருக்கிறார்கள். ஜனநாயக ரீதியில் மாணவர்களால் நிறைவேற்றப்படும் திட்டத்தைத்தான் சம்மேளனம் அமுலுக்குக் கொண்டு வருகிறது. அதனால் சம்மேளனத்தில் கம்யூனிஸ்ட் ஆதிக்கம் இருப்பதாகக் கூறுவது தப்பபிப்பிராயம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாணவர் ஒற்றுமையே சம்மேளனத்தின் லட்சியம். அதன் மூலம்தான் மாணவர் சமூகம் சிறப்பாகச் சேவை செய்ய முடியும் என்பதை சம்மேளனம் உணர்கிறது. இதர மாணவர்களும் காங்கிரஸ் தலைவர்களும் ஒற்றுமைக்கு உதவுவார்களென்று நாங்கள் நம்புகிறோம். உங்கள் ஆசியுடன், அதற்காக அல்லும் பகலும் பாடுபடுவோம்.

இப்படிக்கு,

எஸ். ராமகிருஷ்ணன்.

வட மேற்கே ஒரு அற்புதம்

குடுகுடு குடுகுடு குக் குடுகுடு
நல்ல சேதி வருகுது! நல்ல சேதி வருகுது!
குடுகுடு குடுகுடு, குடுகுடுகுடு
வட மேற்குத் திசையிலிருந்து வருகுது!
பட்டாணியர் நாட்டிலேயிருந்து வருகுது!
ரொம்ப ரொம்ப நல்ல சேதி வருகுது! * * *

இவ்வாறு சென்ற வியாழக்கிழமை காலையில் பொழுது விடிந்ததும் தெருவோடு குடுகுடுப்பாண்டி சொல்லிக் கொண்டு போனான்.

நாம் அதை நம்பவில்லை.

'இந்தத் துர்ப்பாக்கிய நாட்டிலேயாவது, நல்ல சேதி வருகிறதாவது, வெறும் பேச்சு, வீண் பிதற்றல்' என்று எண்ணிய வண்ணம், காலையில் வந்த தினசரிப் பத்திரிகையைப் பிரித்துப் பார்த்தோம்.

உடனே பத்திரிகையை மூடிக் கீழே வைத்தோம்.

நம் கண்ணிலே ஏதாவது கோளாறு? ஒன்றுக்குப் பதில் இன்னொன்றைப் பார்க்கிறோமா? அல்லது குடுகுடுப் பாண்டிதான் ஏதாவது மாய மந்திரம் போட்டுப் பிரமை உண்டாக்கி விட்டானா? — என்று சிந்தித்து விட்டு, மறுபடியும் பத்திரிகையை எடுத்துப் பிரித்தோம். நன்றாக உற்றுப் பார்த்தோம்.

எழுத்துக்கள் மிகத் தெளிவாகத்தான் இருந்தன. செய்தியோ நம்ப முடியாத செய்தியாயிருந்தது.

அதாவது, வட மேற்கே, எல்லைப்புற மாகாணத்திலே, மறுபடியும் காங்கிரஸ் மந்திரி சபை ஏற்பட்டிருக்கிறது!

அந்த மாகாணத்தின் பழைய காங்கிரஸ் பிரதம மந்திரி — ஐந்து வருஷத்துக்கு முன் ராஜிநாமா செய்த மந்திரி— டாக்டர் கான் சாகிபு மறுபடியும் பிரதம மந்திரியானார்!

பழைய காங்கிரஸ் மந்திரிகளையே கொண்ட புதுக் காங்கிரஸ் மந்திரி சபையை அமைத்தார்!

'எல்லைப்புற காந்தி' கான் அப்துல் கபூர்கானை விடுதலை செய்யத் தாக்கீதும், அவரை அழைத்து வரத் தனி ரயில் வண்டியும் போயிருக்கின்றன.

— இவைதான் நம்மைப் பிரமிக்க வைத்த செய்திகள்.

இந்தியாவின் அரசியலில் அறிவுக்குகந்த காரியம் நடப்பதென்பது சென்ற ஐந்து வருஷத்தில் குதிரைக் கொம்பாகப் போயிருந்தபடியால்தான், மேற்படி செய்தியை நம்புவது நமக்கு அவ்வளவு கடினமாயிருந்தது. இப்பேர்ப்பட்ட அற்புதமும் நடந்திருக்க முடியுமா என்று அதிசயப்பட்டோம்.

ஒரு வேளை, மறு நாள், "மேற்படி செய்தி உண்மையல்ல" என்று மறுப்பு வந்து விடுமோ என்றும் சந்தேகப் பட்டோம்.

ஆகையினால்தான் சென்ற "கல்கி" இதழில் எல்லைப்புறத்து அற்புதத்தைப் பற்றி நாம் ஒன்றும் எழுத வில்லை. இரண்டு நாள் பார்த்துக் கொண்டு உண்மை என்று ஊர்ஜிதமான பிறகு எழுதலாமென்றே விட்டு விட்டோம்.

நல்ல வேளையாக, அப்பேர்ப்பட்ட அற்புதம் எல்லைப்புற மாகாணத்தில் நடந்தது உண்மைதான் என்று ஊர்ஜிதமாயிற்று.

காங்கிரஸ் மந்திரிகள் கவர்னர் முன்னிலையில் விசுவாசப் பிரமாணம் செய்து விட்டுப் பதவியை ஏற்றுக் கொண்டார்கள் என்றும், சிறையிலிருந்த கான் அப்துல் கபூர்கானும் மற்றப் பாதுகாப்புக் கைதிகளும் விடுதலையடைந்து ஊர் வந்து சேர்ந்தார்கள் என்றும் செய்திகள் வந்தன.

கடைசியாக, ஐந்து வருஷத்துக்குப் பிறகு, இந்தியாவின் அரசியலில் அறிவின் ஆட்சி மீண்டும் ஆரம்பமாகி விட்டது! கண் உள்ளவர்கள் காணத் தொடங்கி விட்டார்கள்!

அந்த வரையில் தேசத்திற்கு ஏதோ நல்ல காலந்தான்!

* * *

ஐந்து வருஷத்துக்கு முன்னால் தாங்கள் விட்ட பதவிகளை மறுபடியும் ஏற்றுக் கொண்ட எல்லைப்புறக் காங்கிரஸ் மந்திரிகள் தாங்கள் செய்திருக்கும் காரியத்தைப் பற்றிக் கொஞ்சமாவது சங்கோசப் படுவதாகவோ, வெட்கப்படுவதாகவோ தெரிய வில்லை.

"மற்ற மாகாணங்களும் எங்களைப் பின்பற்றட்டும்!" என்கிறாராம் அந்த

மந்திரிகளில் ஒருவர். மனுஷருக்கு என்ன தைரியம் பாருங்கள்!

பிரதம மந்திரி டாக்டர் கான் சாஹிபை, "1939-ம் ஆண்டுக்கும் 1945-க்கும் என்ன வித்தியாசம்?" என்று யாரோ கேட்டார்களாம்.

அதற்கு அவர், "அந்த வித்தியாசம் உங்கள் கண் முன்னால் தெரிகிறதே? கொஞ்சம் கண்ணைத் திறந்து பார்ப்பது தானே!" என்றாராம்.

மனுஷருக்கு என்ன அகம்பாவம் பாருங்கள்!

அகம்பாவமாயிருந்த போதிலும், டாக்டர் கான் சாஹிபு சொன்னதில் உண்மை இருக்கிறது. எனவே, அதை நாம் கேட்டுக் கொள்ள வேண்டியது தான்.

• • •

1939-ம் ஆண்டிற்கும் 1945-ம் ஆண்டிற்கும் உள்ள ஒரு முக்கியமான வித்தியாசத்தை நாம் இங்கு எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.

1939-ம் வருஷத்தில், பின்னால் வரப் போவதை உணர்ந்து, "கையிலுள்ள மந்திரி பதவிகளை விடுவது பெரிய அரசியல் தவறாகும்" என்று முடிவு செய்து தீர்மானமாய்ச் சொல்வதற்கு ஆழ்ந்த அறிவும் தீர்க்க திருஷ்டியும் தேவையாயிருந்தன.

ஆனால், இப்போது, "மேற்படி முறை தவறு" என்று தெரிந்து கொள்வதற்குப் பிரமாதமான அறிவு தேவையில்லை; கண் முன்னால் உள்ள குட்டிச் சுவரைப் பார்ப்பதற்கு வேண்டிய சக்தி இருந்தாலே போதும்! பலாபலன்கள் அவ்வளவு தெளிவாக இருக்கின்றன. இதனால் தான் டாக்டர் கான் சாஹிபு, "கொஞ்சம் நன்றாய்க் கண்ணைத் திறந்து பாருங்களேன்!" என்று சொன்னார்.

ஆனால், அவர் அப்படிச் சொல்லி விட்டதனால் என்ன? எல்லாரும் கண்ணைத் திறந்து பார்த்துவிடப் போகிறார்களா? "அதெல்லாம் கண்ணைத் திறந்து பார்க்க மாட்டோம்! குட்டிச் சுவரில் முட்டிக் கொண்டாலும் சரி தான்!". என்று சொல்கிறவர்களும் இருக்கத்தான் இருக்கிறார்கள்!

"எல்லைப்புற மாகாணத்து நிலைமை விசேஷ நிலைமை! அந்த விசேஷ நிலைமைக்கு மட்டும் கண்களைத் திறந்து பார்க்கலாம். மற்ற மாகாணங்களில் பாழும் குட்டிச் சுவரில் முட்டிக் கொள்வதுபோல் சிலாக்கியமான காரியம் வேறொன்றுமில்லை" என்கிறார்கள்.

இவர்களுடைய நிலைமை ஒருவிதத்தில் விசேஷ கஷ்டம் வாய்ந்த நிலைமை என்பதில் சந்தேகமில்லை.

ஐந்து வருஷமாக ஒரு தவறு செய்து கொண்டிருந்து விட்டு, அதுவே 'சரி' என்றும் சாதித்துக் கொண்டிருந்து விட்டு, கடைசியாக அது 'தவறு' என்று ஒப்புக் கொள்ள வேண்டுமென்றால், அது கஷ்டமான காரியந் தான்.

கஷ்டமாயிருந்தபோதிலும் சாதிக்க முடியாத காரியம் இல்லை. அதனால் கெடுதலும் நேர்ந்து விடாது. ஜனங்களின் முன்னிலையில் போய், "செய்தது தவறுதான்; ஆனால் சுயநலத்துக்காகச் செய்யவில்லை. தேச நன்மை என்று கருதித்தான் செய்தோம். அது பிசகாய்ப் போய் விட்டது!" என்று ஸ்பஷ்டமாய்ச் சொன்னால், இந்தியாவின் நல்ல ஜனங்கள் கட்டாயம் ஒப்புக் கொள்வார்கள்.

மேற்கண்டவாறு தவறை ஒப்புக் கொள்வதில் இன்னொரு பெரிய கஷ்டம் சிலருக்கு இருக்கிறது.

தங்கள் கட்சி தவறு என்று ஒப்புக் கொள்ளும்போது, "ராஜாஜியின் கட்சி சரி" என்று ஒப்புக் கொள்ள வேண்டியதாய்ப் போய்விடுமல்லவா?

ஆனால் யார் ஒப்புக் கொண்டாலும் ஒப்புக் கொள்ளாவிட்டாலும், ராஜாஜியின் கட்சிதான் சரியானது என்பது இப்போது தெள்ளத் தெளிய ஸ்பஷ்டமாக ருசுவாகி விட்டது.

அவரை எதிர்த்த மற்றவர்களின் கட்சி யெல்லாம் முற்றும் பிசகானது என்பதும் நிரூபிக்கப் பட்டு விட்டது.

இதை எண்ணி மற்றவர்கள் எப்படி அவஸ்தைப் பட்டாலும், தென்னாட்டில் உள்ள நாமெல்லோரும் பெருமைப்பட இடமிருக்கிறது.

நமது தலைவரின் தீர்க்க தரிசனத்தையும், அரசியல் மதிநுட்பத்தையும், வரப் போவதை உணர்ந்து கூறிய முன் யோசனையையும் நாம் உவந்து பாராட்ட வேண்டும். அதைக் காட்டிலும் அதிகமாக, அவர் தேச நன்மையை முன்னிட்டுத் தமது கட்சியை எடுத்துச் சொல்வதில் காட்டிய மகத்தான தீரத்தைப் பாராட்ட வேண்டும்.

யுத்த காலத்தில் கூடிய வரை அரசாங்கப் பதவிகளைத் தேசியவாதிகள்

கைப்பற்ற வேண்டும், கையிலுள்ள பதவிகளை ஒரு நாளும் விடக்கூடாது என்று நமது தலைவர் உணர்ந்திருந்தார்.

பிரிட்டிஷார் யுத்தத்தில் ஜயிப்பதானால் காங்கிரஸ் அவசியம் அரசாங்க அதிகாரத்திலிருக்க வேண்டும் என்றும், பிரிட்டிஷார் யுத்தத்தில் தோற்பதாயிருந்தால் இன்னும் அவசியமாகக் காங்கிரஸ் அரசாங்க அதிகாரத்தில் இருக்க வேண்டும் என்றும் ராஜாஜி ஒப்பற்ற இராஜ தந்திரத்துடன் கூறினார்.

சாதாரண காலத்தில் பத்து வருஷத்தில் தேசம் அடையக்கூடிய முன்னேற்றத்தை யுத்தகாலத்தில் ஒரு வருஷத்தில் தேசம் அடையலாம் என்பதை ராஜாஜி அறிந்திருந்தார்.

யுத்தத்தில் பிரிட்டிஷ் தோற்றும் கட்சியாயிருக்கும்போதே அவர்களிடம் ராஜி செய்து கொண்டு இராஜ்யத்தைக் கைப்பற்ற வேண்டும், அப்புறம் தும்பை விட்டு வாலைப் பிடிப்பது போலாகும் என்று சொன்னார்.

யுத்த காலத்தில் பொதுஜனச் சட்ட மறுப்பு உதவாது, நடவாது என்று ராஜாஜி நம்பினார்.

மேற்படி காரணங்களினால், ''மந்திரி பதவிகளை விடக் கூடாது'' என்றார். ''கிரிப்ஸ் திட்டத்தை ஒப்புக்கொள்ள வேண்டும்'' என்றார். ''பிரிந்து போகும் உரிமை கொடுத்தாவது முஸ்லிம் லீக்குடன் ஒற்றுமையாக வேண்டும்'' என்றார்.

'வீராவேச'க் குருட்டு தேசபக்திக்கு எதிரிடையான மேற்படி கொள்கைகளைப் பிடிவாதமாக ஆதரித்ததில், ராஜாஜி தமது அரசியல் வாழ்வையே இழக்கத் தயாராயிருந்தார்.

தாம் கண்ட உண்மையில் அவ்வளவு திடமான நம்பிக்கை கொண்டிருந்தபடியால்தான் அத்தகைய மகா தியாகத்துக்கு அவர் உட்பட்டார்.

அவ்விதம் தீர்க்க தரிசனத்துடன் தேசத்தைக் காப்பாற்ற முயன்றதற்காக, நமது ஒப்பற்ற தலைவரை, அற்பர்கள், ''அதிகாரத்துக்கு ஆசைப் பட்டவர்'' என்றார்கள். நண்பர்கள், ''ஐயோ! இவர் ஏன் தம் செல்வாக்கை இழக்கிறார்?'' என்று அநுதாபப் பட்டார்கள். தேசத்துக்காகத் துரும்பு எடுத்துப் போடாத அரசியல் நிரட்சர குட்சிகள் அவருக்குப் போதனை செய்ய முன்வந்தார்கள். அவருடைய நேர்மையையும் பட்சபாதமற்ற கண்டிப்பையும் விரும்பாத போலி தேசபக்தர் கூட்டம் ''மனுஷர் தொலைந்தார்!'' என்று குதூகலம் அடைந்தது.

ஆனால், ஒவ்வொன்றாக, ஒவ்வொன்றாக, ராஜாஜி கூறியதுதான் சரி என்று ஸ்பஷ்டமாக வெளியாகி விட்டது.

சென்ற ஐந்து வருஷத்தில் ராஜாஜியின் தலைமை தேசத்துக்கு இல்லாமற் போய் விட்டதே என்பதை நினைக்க நமக்கு வருத்தமாய்த்தானிருக்கிறது.

ஆம்; ராஜாஜி காட்டிய வழியை ஒப்புக் கொண்டிருந்தால், சென்ற ஐந்து வருஷத்தில் இந்தியா தேசம் அமெரிக்காவையும் ருஷியாவையும் போன்ற மகத்தான வல்லரசாகும் மார்க்கத்தில் இப்போது முன்னேறிக் கொண்டிருக்கும். அதற்குத் தேசம் கொடுத்து வைக்கவில்லை.

ஐந்து வருஷம் போனதுதான்: இரண்டாயிரம் கோடி ரூபாய் திரும்பி வர முடியாதபடி போனதுதான்; போன சந்தர்ப்பமும் போனதுதான்.

ஆனால், எது போனாலும் போகட்டும். இனிமேல் நடக்க வேண்டிய காரியங்களாவது சரியாக நடந்தால் போதும். சென்று போன நிகழ்ச்சிகளின் பலாபலன்களையும் லாப நஷ்டங்களையும் நன்றாக உணர்ந்து வரும் காலத்துக்குரிய வேலைத் திட்டத்தை ஒழுங்காக அமைத்தால் போதும்.

நமது அரசியல் சரித்திரத்தில் சென்று போன ஐந்து வருஷமும் எப்படி முக்கியமானதோ, அப்படியே வரப் போகும் இரண்டு மூன்று வருஷமும் முக்கியமானதாயிருக்கும்.

சிறைக்கு வெளியிலுள்ள முக்கிய காங்கிரஸ் தலைவர்கள் ஒருங்கு கூடிக் கலந்து ஆலோசித்துத் தேசம் முழுவதற்கும் பொதுவான ஒரு அரசியல் திட்டத்தை வகுக்க வேண்டும்.

தோல்வி யடைந்த பட்டாளத்தைச் சேர்ந்த வீரர்கள் தலைக்கு ஒரு பக்கமாகப் பிய்த்துக் கொண்டு ஓடுவது போல, மாகாணத்துக்கு ஒரு கொள்கை எதற்காக? எல்லைப்புறத்தில் மந்திரி சபை, சிந்துவில் அரைவாசி ஒத்துழைப்பு, அஸ்ஸாமில் முழு ஒத்துழைப்பு, மற்ற மாகாணங்களில் கம்யூனிஸ்ட் வேட்டை; — இப்படி யெல்லாம் ஏன் காங்கிரஸ் கொள்கை பிளவு பட்டு நிற்க வேண்டும்? காங்கிரஸ் பிரமுகர்கள் தலைக்குத் தலை மனம் போனபடி ஏன் பேச வேண்டும்?

வடமேற்கே நடந்த அற்புதம் அகில இந்திய அற்புதமாக மாற வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். அதற்கு ஒத்தாசை செய்யுமாறு எல்லாத் தேச பக்தர்களையும் கேட்டுக் கொள்கிறோம்.

எல்லைப்புற வெடி குண்டு

—(O)—

'படார்!' என்று வெடிக்கிறது!

—(O)—

— நாலாபுறமும் திகைப்பும் வியப்பும் உதைப்பும் பதைப்பும் —

—(O)—

★ நமது விசேஷ அரசியல் நிருபர் ஏக காலத்தில் கிழக்கிலும் மேற்கிலும் வடக்கிலும் தெற்கிலும் மேலேயும் கீழேயும் சென்று, நிலைமையைப் பிய்த்துப் பிய்த்து ஆராய்ந்து, பட்டப்பகலை வெட்ட வெளிச்சமாக்குகிறார். இனி அவரே வெளிச்சம் போடட்டும் :— ★

எல்லைப்புற மாகாணத்தில் காங்கிரஸ் மந்திரி சபை ஏற்பட்டது என்று அறிந்ததும், நாலாபுறமும் விழுந்தடித்து ஓடினேன். அப்படியும் ஒன்றும் விளங்கவில்லை. விஷயம் மர்மமாகவே இருந்தது. எனவே கொஞ்சம் நிதானமாக ஒவ்வொரிடமாகச் சென்று ஆராய்ந்து மர்மத்தைத் தெரிந்து கொள்வதென்ற தீர்மானத்துடன் ரிக்ஷா வண்டியில் ஏறிக்கொண்டு புறப்பட்டேன்.

முதலில், வர்தா போய்ச் சேர்ந்தேன். வர்தாவில் மகாத்மா காந்தி தங்கியிருக்கும் ஆசிரமத்தில்தான் எல்லைப்புற மர்மத்தின் அந்தரங்க இரகசியம் இருக்க வேண்டும் என்பதாக என்னுடைய அந்தராத்மாவுக்குத் தெரிந்துபோய் விட்டது. ஒரு வாரத்துக்கு முன்னால் மேற்படி ஆசிரமத்துக்கு ராஜாஜி வந்துவிட்டுப் போயிருந்தாரல்லவா? ஒரு தடவைக்கு மேல் இரண்டாவது தடவையும் மகாத்மா காந்தியை அந்த மந்திரி பதவி மோகம் பிடித்தவர் பேட்டி கண்டு பேசினாரல்லவா? பேசியது ஏதோ குடும்ப விஷயம் என்று சொல்லப்பட்டது. இருக்கலாம், ஆனால் எந்தக் குடும்ப விஷயம்? ஆ! அதிலேதான் இருக்கிறது சூக்ஷமம்! குடும்ப விஷயமா அல்லது குடுமி விஷயமா? — நிற்க. அந்த உச்சிக் குடுமி மனிதர் எதைப் பற்றிப் பேசினால் என்ன? அவர் வந்து விட்டுப் போனதே போதாதா?

ஆகவே, முதலில் நானும் வர்தாவில் மகாத்மா ஆசிரமத்துக்குப் போய்ச் சேர்ந்தேன். நான் போன சமயமும் மகாத்மா தடியை எடுத்துக் கொண்டு கிளம்பிய சமயமும் சரியாயிருந்தது. முதலில் கொஞ்சம் பயப்பட்டேன். பிறகு மனதைத் திடப்படுத்திக் கொண்டு அருகில் சென்று மகாத்மாவுக்கு நமஸ்கரித்தேன். மகாத்மாவும் திரும்ப நமஸ்கரித்தார். திடுதிப்பென்று முக்கிய விஷயத்தைக் கேட்கக் கூடாதென்பதற்காக, "காங்கிரஸ் கமிட்டியா? காங்கிரஸ் சங்கமா? — எது சரி? தங்கள் அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டேன். அந்தக் கேள்விக்குப் பதிலாக மகாத்மா வகித்த ஆழ்ந்த மௌனம் என்னைப் பரவசப்படுத்தி விட்டது.

உடனே, தொழிலாளர் பிரச்னை, கிஸான்களின் தனிக்கொடி இயக்கம், நிர்மாணத் திட்டத்தை நடத்தி வைக்கும் விஷயம், ஸான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டுத் தூது—ஆகியவற்றைப் பற்றிக் கேட்டேன். எல்லாவற்றிற்கும் மகாத்மா மௌனமாகவே பதில் சொன்னார். "மகாத்மா எப்படியும் மகாத்மாதான்" என்று நான் முடிவாகத் தீர்மானம் செய்துகொண்டு, கடைசியாக, "எல்லைப்புற மாகாணத்துக் காங்கிரஸ் மந்திரி சபையைத் தாங்கள் ஆசீர்வதித்ததாகச் சொல்லப்படுவதில் உண்மை உண்டா?" என்று கேட்டேன்.

ஆஹா! மகாத்மா ஒரு புன்னகை புரிந்தார்! அந்தப் புன்னகையில் அடங்கிக் கிடந்த பொருள்களை எப்படிச் சொல்வேன்! முடியாது! முடியவே முடியாது! எனவே அந்தக் காரியத்தில் இறங்காமல் மேலே பிரயாணத்தைத் தொடங்கினேன். புது டில்லி போய்ச் சேர்ந்தேன்.

புது டில்லியில் நேரே வைஸராய் மாளிகைக்குப் போனேன். வைஸராய் தமது மாளிகையில் ஆஜரில்லை யென்றும் வெளியே போயிருக்கிறாரென்றும் தெரிந்தது. அவரைத் தேடிக் கொண்டு போய், ஒரு நாற்

சந்தியில் வண்டிப் போக்குவரவு தடைப்பட்டிருந்த இடத்தில் சந்தித்தேன்.

"வார்டு வேவல்! வார்டு வேவல்! இங்கே பாருங்கள்! நான்தான் வந்திருக்கிறேன்" என்றேன்.

வைஸ்ராய் வேவல் என்னைப் பார்த்துத் தலையை ஆட்டினார்.

"ஆமாம்; உங்களுக்குத் திடீரென்று நல்ல புத்தி வந்துவிட்டது என்று கேள்விப்பட்டேனே, அது உண்மையா?" என்றேன்.

"ஆம்" என்பதற்கு அறிகுறியாக வேவல் தலையை யசைத்தார்.

"எல்லைப்புற மாகாணத்தில் காங்கிரஸ் மந்திரி சபை ஏற்பட்டதில் உங்களுக்குச் சந்தோஷந்தானே?"

"ஆமாம்; சந்தோஷந்தான்!"

"மற்ற மாகாணங்களிலும் காங்கிரஸ் மந்திரி சபை ஏற்படுவது உங்களுக்கு விருப்பந்தானே?"

"விருப்பந்தான்."

"அப்படியானால், சிறையிலுள்ள காங்கிரஸ் தலைவர்களை நீங்கள் ஏன் விடுதலை செய்யவில்லை?" என்று வைஸ்ராய் வேவலை ஒரு மடக்கு மடக்கினேன்.

வேவல் சிறிது திணறி விட்டு, "ஆமாம்; சிறையிலுள்ள காங்கிரஸ் தலைவர்கள் விடுதலையாவதில் உங்களுக்குச் சம்மதந்தானே?" என்று திருப்பிக் கேட்டார்.

"சம்மதந்தான்!" என்றேன்.

"அப்படியானால் மற்ற மாகாணங்களிலும் காங்கிரஸ் வாதிகள் ஏன் மந்திரி சபை அமைக்கவில்லை?" என்று கேட்டார்.

நான் சற்றுத் திணறிவிட்டு, "அழைத்தால்தானே வருவார்கள்?" என்றேன்.

"வந்தால் தானே அழைப்பார்கள்?" என்று பதில் வந்தது.

அத்தனை நேரமும் என்னுடன் பேசியது வைஸ்ராய் வேவல் அல்லவென்றும், நான் எதிரிருந்த டோங்கா ஓட்டி என்றும் தெரிந்தபோது வெகு கோபமாயிருந்தது.

டோங்கா ஓட்டியின் மீது வந்த கோபத்தை ராஜாஜிமேல் காட்டலாம் என்று எண்ணி, புது டில்லியில் அவருடைய ஜாகையை விசாரித்துக் கொண்டு போனேன். மனுஷர் நான் வருவேன் என்பதை எப்படியோ அவருடைய பிரசித்தி பெற்ற தீர்க்க திருஷ்டியினால் தெரிந்து கொண்டு குவாலியருக்கு ஓடிப் போய்விட்டார்.

ஒருவரைத் தூற்றுவதில் பயனில்லையென்று, இந்திய சட்ட சபை கூடியிருக்கும் இடத்துக்குச் சென்றேன். அங்கத்தினர்களை யெல்லாம் ஒவ்வொருவராய்ப் பார்த்து, "எல்லைப்புற வெடி குண்டின் மர்மம் என்ன?" என்று கேட்டேன். ஒவ்வொருவரும் ஏகமனதாகப் பேந்தப் பேந்த விழித்தார்கள்.

"சரி; புரிந்து கொண்டேன்!" என்று சொல்லி விட்டு, வெடி குண்டு வெடித்த ஸ்தலத்துக்கே போய் விசாரித்து விடுவதென்று நடையைக் கட்டினேன்.

பெஷாவரின் வீதிகளில் மேற்படி வெடி குண்டு மர்மத்தை எங்கெங்கோ தேடியும் ஒன்றும் புலன் கிடைக்காமல் போன பிறகு, டாக்டர் கான் சாஹிபைத் தேடிச் சென்று அவரைக் கைப்பிடியாகப் பிடித்தேன்.

"என்ன, டாக்டர் சாஹிபு! குபீரென்று இந்த மாதிரி செய்து விட்டீர்களே?" என்றேன்.

"ஆமாம்; செய்து விட்டேன்" என்றார் கான் சாஹிபு.

"நிஜத்தைச் சொல்லி விடுங்கள்; மகாத்மா அனுப்பிய ஸீல் வைத்த கடிதத்தில் எழுதியிருந்த விஷயம் வெகு மர்மமான விஷயந்தானே?" என்று கேட்டேன்.

நான் எதிர்பார்த்ததுபோலவே டாக்டர் கான்சாஹிபு ஒரு அபார புன்னகை புரிந்தார். வர்தாவில் மகாத்மா காந்தியின் புன்னகையில் என்ன மாதிரி ஓசை கேட்டதோ அந்த ஓசை டாக்டர் கான் சாஹிபுவின் புன்னகையிலும் கேட்கவே, எனக்கு விஷயம் டணார் என்று புரிந்து விட்டது.

ஆகவே, "உங்கள் சகோதரர் கான் அப்துல் கபூர் கானை எதற்காக விடுதலை செய்தீர்கள்?" என்று கேட்டேன்.

"ஏன் கூடாது?" என்றார் கான் சாஹிபு.

"சிறையிலிருந்து வெளி வருவதைக் காட்டிலும் சிறையில் உயிர் துறப்பதே மேலல்லவா?" என்றேன்.

"அந்தக் காரியத்தை நீ செய்வதுதானே? இங்கு எதற்கு வந்தாய்?" என்று கேட்டார்.

"எனக்காகச் சொல்லவில்லை; தலைவர்களுக்காகச் சொன்னேன். மகாத்மாகூட 'அவர்கள் சிறையில் செத்துப் போனாலும் வருத்தப்பட மாட்டேன்' என்று சொல்லியிருக்கிறாரே?" என்றேன்.

சென்ற இதழில் வெளியான கானேஷுப் துணுக்குக்குப் பரிசு பெற்றவர்: கே. ஆர். சுவாமி, 67, தேரடித் தெரு, அல்சூர், பெங்களூர்.

இதற்கு, "நான் மகாத்மா இல்லை!" என்று டாக்டர் கான் சாகிபு பதில் சொன்னதும், அதில் அடங்கியிருந்த உண்மையை எண்ணிப் பிரமித்தேன்.

"கான் சாகிபு! இன்னும் ஒரே ஒரு கேள்வி! 1939-ம் வருஷத்துக்கும் 1945-ம் வருஷத்துக்கும் என்ன வித்தியாசம்!" என்று கேட்டேன்.

"உன்னை உன் பெற்றோர் பள்ளிக்கூடத்தில் வைக்கவில்லையா?" என்று டாக்டர் கான்சாகிபு ஒரு திகைக்கிடும் கேள்வியைப் போட்டார்.

"ஏன் கேட்கிறீர்கள்?" என்றேன்.

"உனக்குக் கணக்குத் தெரியாதா? — கூட்டல், கழித்தல்!" என்றார்.

"கொஞ்சம் தெரியும்!" என்றேன்.

"அப்படியானால் 1939 க்கும் 1945 க்கும் வித்தியாசம் என்ன என்று என்னை ஏன் கேட்கிறாய்? ஆறு வருஷம் வித்தியாசம் என்று தெரியவில்லையா?" என்று டாக்டர் கான்சாகிபு சொன்னதும், கொஞ்ச நஞ்சம் பாக்கியிருந்த சந்தேகமும் எனக்குத் தீர்ந்துவிட்டது. பிறகு, எல்லைப்புற மாகாணத்துக்கும் சமது சென்னை மாகாணத்துக்கும் உள்ள தாரதம்மியங்களைத் தீர்க்கமாக ஆராயத் தொடங்கினேன்.

எல்லைப் புறத்துக்கும் சென்னை மாகாணத்துக்கும் இரண்டு முக்கிய வேற்றுமைகள் இருப்பதைக் கண்டு பிடித்தேன். அந்த வேற்றுமைகள் வருமாறு:—

1. எல்லைப்புற மாகாணத்தில் ஸர்தார் அவுரங்கசீப்கானின் தலைமையில் முஸ்லிம் லீக் மந்திரி சபை ஏற்பட்டு இல்லாத அட்டூழியங்களை யெல்லாம் செய்து வந்தது. ஆகையால் அந்த லீக் மந்திரி சபையை ஒழிப்பதற்காகக் காங்கிரஸ் மந்திரி சபை ஏற்படுவது அவசியமாயிருந்தது.

ஆனால், சென்னை மகாணத்திலோ தர்மதுரையாகிய ஸர் ஆர்தர் ஹோப் அவர்கள் தமது நீதி தவறாத அட்வைஸர்களுடன் அதிகார வர்க்க ஆட்சியை அமோகமாக நடத்தி, மூடிய கள்ளுக்கடைகளை யெல்லாம் திறந்தும், கலால் வருமானத்தை நூறு கோடியிலிருந்து பதினாறு கோடியாகப் பெருக்கியும், விற்பனை வரியை ஒழுங்காக வசூல் செய்தும் — இப்படியாகச் செங்கோல் நடாத்தி வருகிறார். ஆகையால், இம் மாகாணத்தில் காங்கிரஸ் மந்திரி சபை ஏற்படுவது கொஞ்சமும் அவசியமில்லை.

2. எல்லைப்புற மாகாணம் முஸ்லிம்கள் பெரும்பான்மையோரான மாகாணம்; சென்னையோ ஹிந்துக்களின் மாகாணம். முஸ்லிம் மாகாணங்களில் எல்லாம் காமா சோமா என்று எப்படியோ ஜனப்பிரதிநிதிகளின் ஆட்சி—அதாவது, முஸ்லிம்களின் ஆட்சி நடக்க வேண்டுமென்றும், ஹிந்து மாகாணங்களில் எல்லாம் ஹிந்துக்கள் வாயிலே விரலை வைத்துக்கொண்டு நிற்க வேண்டுமென்றும் வேதம், பைபிள், குர்ஆன் ஆகியவற்றில் எழுதியிருக்கிறது.

ஆகவே, எல்லைப்புறத்துக்குச் சரியான காரியம் சென்னைக்குச் சரியாகாது என்பதில் எனக்கு என் மூக்கு அத்தனை சந்தேகமும் கிடையாது என்பது திண்ணம்.

• • •

இதற்கிடையில், சென்னை வாசிகள் வடக்கே குவாலியரை நோக்குவார்களாக. கண்ணைக் கொட்டாமல் குவாலியரையே நோக்குவார்களாக. அப்படி இப்படிக் கண்ணைத் திருப்பாமல் குவாலியரையே நோக்கிக் கொண்டிருப்பார்களாக.

ராஜாஜி சென்னையிலிருந்து வர்தாவுக்கும் வர்தாவிலிருந்து டில்லிக்கும் குடும்பக் காரியமாகப் போனதின் மர்மம் குவாலியரில் வெளியாகப் போகிறது! சென்னைக் காங்கிரஸ் மந்திரி சபை குபீரென்று பெரும் பூதமாகக் குவாலியரிலிருந்து கிளம்பவில்லையென்றால், என்னை வந்து கேளுங்கள். நான் எல்லையற்ற மௌனக் கடலில் ஆழ்ந்துவிடுகிறேனா, இல்லையா, பாருங்கள்!

கலியின் கனவு

நாகப்பட்டணத்தில் ஸ்ரீ சக்தி நாடக சபையாரால் புகழுடன் நடத்தப்பட்டு வரும் 'கலியின் கனவு' என்னும் நாடகத்தை இயற்றிய ஆசிரியர் ஸ்ரீ எஸ். டி. சுந்தரம் என்று அறிகிறோம். இதை மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறோம்.

—ஆசிரியர்

இப்பொழுது நடைபெறுகிறது!

பெங்களூர்
மூனிலண்ட்

மைசூர்
மோதிலால் டாக்கீஸ்

★

ஆரம்ப தேதியை எதிர்பாருங்கள்!

சென்னை
பிரபாத்

மதுரை
சென்ட்ரல்

கோயமுத்தூர்
ராஜா



FOR ANDHRA, CEDED & NIZAMS: CHAMRIA RELEASE.



அம்பயர் நடராஜன்

சென்னையில் குதூகலம்

வஸந்தன்

சென்ற வெள்ளிக்கிழமை யன்று காலை சென்னைப் பட்டணத்திலுள்ள மாணவர்கள் "பரீட்சைகளைக் கொண்டுபோய் உடைப்பில் போட வேண்டும்" என்று ஸ்ரீ டி.கே.சி. சொல்வதை முற்றிலும் ஆமோதித்தார்கள். காரணம், அன்று சேப்பாக்கத்தில் நடக்கும் கிரிக்கட் பந்தயந்தான்! அதுவும், சாமான்யமான கிரிக்கட்டா? இலங்கைக்குப் போகும் அகில இந்தியக் கோஷ்டிக்கும்—சென்னைக் கோஷ்டிக்கும் நடக்கும் பந்தயம். பிரசித்தி பெற்ற ஆட்டக்காரர்களான மர்ச்செண்ட் என்ன, முஷ்டாக் அலி என்ன, மோடி என்ன, அமர்நாத் என்ன — இவர்கள் எல்லாரும் ஆடுகிறார்களென்றால் எப்படி அதைப் பார்க்காமல் இருக்க முடியும்? இவ்வளவு நல்ல கிரிக்கட் பந்தயம் நடக்கும்போது, சமய சந்தர்ப்பத்தைப் பார்க்காமல், கொஞ்சமும் இங்கிதம் தெரியாமல், சர்வ கலாசாலைக்காரர்கள் திங்கட்கிழமை யன்று வருஷாந்திரப் பரீட்சையை வைத்துக் கொண்டிருக்கிறார்களே, இது என்ன அக்கிரமம் என்று அங்கலாய்த்தார்கள்.

ஆனால் இந்தச் சமயத்தில் பையன்களுக்குப் படிப்பில் கொஞ்சமும் புத்தி போகாது என்பதை அறிந்த பெற்றோர்கள் கடைசியில் கிரிக்கட் பந்தயத்தைப் பார்த்து விட்டு வரும்படி அவர்களுக்கு உத்தரவு கொடுத்து அனுப்பினார்கள். இவர்களைத் தவிர, பாட்டியைப் பறிகொடுத்து விட்டு லீவு வாங்கிக்கொண்டவர்களும், திடீர் மயக்கத்தால் ஆபீஸ் போக முடியாதவர்களும், குடும்பத்தை அழைத்துக் கொண்டு வருவதற்காக வெளியூருக்குப் போகிறவர்களுமாக ஆயிரக்கணக்கானவர்கள் சேப்பாக்கத்தில் கூடியிருந்தார்கள்.

இந்தியக் கோஷ்டி முதலில் விளையாட ஆரம்பித்தது. சரியாக 11½ மணிக்கு விநூ மான்காட், மர்ச்செண்ட் — இருவரும் விளையாட வந்தபோது, சமுத்திர கோஷத்தைப் போல் எழுந்த ஆரவாரமும், கிரிக்கட் சங்கக் காரியதரிசி ஸ்ரீ கே. எஸ். ரங்கராவ் முகத்தைச் சற்றுக் கடுமையாக வைத்துக்கொண்டு அங்குமிங்கும் சென்றதும் இந்தப் பந்தயம் சாமான்யமான விஷயமல்ல என்பதை ஞாபகப்படுத்தின.

விநூ மான்காட், மர்ச்செண்ட், மோடி, அமர்நாத் முதலியவர்கள் அபாரமாக ஆடி அலை அலையாக ஆரவாரத்தை எழுப்பிக் கொண்டிருந்தனர்.

முஷ்டாக் அலி மானைப்போல் துள்ளித் துள்ளி வந்து பந்தை அடித்து விளையாடிய அழகைப் புகழ்வதா, ஸி. எஸ். நாயுடு சண்டமாருதத்தைப் போல் வீசி, பந்தைச் சிறிது நேரம் காணாமல் அடித்ததைப் பற்றிச் சொல்வதா? மின்னலைப் போல் மின்னி, மோடி சிறிது நேரத்திற்குள் 38 ரன்கள் எடுத்து விட்டு வெளியேறியதைச் சொல்வதா என்று தெரியவில்லை.

இரண்டாவது நாள், சென்னைக் கோஷ்டி விளையாட ஆரம்பித்தது. அஞ்சார் அலி மிகவும் அழகாக ஆடி 38 ரன்கள் எடுத்தார். ராம்ஸிங் நாலா பக்கமும் பந்தைச் சிதற அடித்ததுடன், அவரை அகில இந்தியக் கோஷ்டியில் சேர்த்துக் கொண்டது சரியா, இல்லையா என்று பம்பாயில் சில அதிகப்பிரசங்கிகள் கொண்டிருந்த சந்தேகத்தையும் சிதற அடித்தார்.



ராம்ஸிங்

இந்த ஆட்டத்தில் எம். ஜே. கோபாலனும் ரங்காச்சாரியும் தலைக்கொரு 'ஸிக்ஸர்' அடித்தார்கள். அப்பொழுது ஆகாயத்தில் வெகு உயரத்தில் சென்ற பந்தாவது, சென்னைக் கோஷ்டி கொஞ்சமும் தாழ்ந்ததில்லை என்று நிரூபித்தது

மூன்றாவது நாள்தான் இந்தப் பந்தயத்திலேயே மிகவும் முக்கியமான நாள்.

ஆச்சரியத்தின்மேல் ஆச்சரியமாக, அற்புதத்தின்மேல் அற்புதமாகச் சம்பவங்கள் நடந்துகொண்டிருந்தன. அகில இந்தியக் கோஷ்டி இரண்டாவது தடவையாக ஆட ஆரம்பித்து ஒரு மணி நேரம் கூட ஆகவில்லை. 100,200 என்று ரன்கள் எடுக்கும் மான்காட், முஷ்டாக் அலி, ஹஸாரி முதலியவர்கள் ஒருவர் பின் ஒருவராக வெளியேறினர். இதற்குக் காரணமாயிருந்தவர் சென்னைக் கோஷ்டியில் ஆடிய ஹைதராபாத்தைச் சேர்ந்த குலாம் அகமத் என்னும் இளைஞர். மிகவும் தந்திரமாகப் பந்தை எறிந்து மூன்று பேர்களை வெளியேற்றிப் பிரமிப்பை உண்டு பண்ணினார். 97-ரன்கள் எடுப்பதற்குள் ஆறு பேர்கள் வெளியேறினர். எங்கே 100, 150 எண்ணிக்கையில் அகில இந்தியக் கோஷ்டி வெளியாகிவிடுமோ என்று நினைத்த சமயத்தில் அமர்நாத் வந்து சேர்ந்தார்.

மர்ச்சென்டுடன் சேர்ந்து அநாயாசமாக ஆடி, விருவிருவென்று எண்ணிக்கையை அதிகரித்துக்கொண்டுபோய் மிகவும் நெருக்கடியான நிலைமையிலிருந்து தமது கட்சியைக் காப்பாற்றினார். அமர்நாத்தின் மகத்தான ஆட்டத்தைப் பார்த்து ரஸிகர்கள் ஆரவாரம் கூடச் செய்ய முடியாதபடி மந்திர சக்தியால் கட்டுண்டவர்கள் போலானார்கள். 20 வருஷங்களாக அதுமாதிரி ஆட்டத்தைப் பார்த்ததே இல்லை என்று சிலர் கூறினார்கள்.

அமர்நாத் நுணுக்கமாக அடிக்க வேண்டிய பந்தை நுணுக்கமாகத் தட்டினார். வேகமாக அடிக்க வேண்டிய பந்தை ஓங்கி விளாசினார். கஷ்டமான பந்தை விளையாடிவிட்டு, "ஆஹா! அற்புதம்!" என்று பந்தை எறிந்தவரைப் பாராட்டினார். சாமர்த்தியமாக ஆடிவிட்டு, "பார்த்தாயா, எப்படி அடித்தேன்?" என்று கேட்பதுபோல் தலையை அசைத்தார். "சபாஷ்!" என்று ரஸிகர்கள் அவர் ஆட்டத்தைப் பாராட்டியபோது, அதை ஏற்றுக்கொண்டதற்கு அறிகுறியாகப் புன்முறுவல் செய்தார். இவ்விதம் நூறு ரன்கள் எடுத்துச் சபையோரைக் குதூகலப்படுத்தி இந்தக் கிரிக்கட் விழாவைச் சென்னை வாசிகள் மறக்க முடியாத கோலாகல வைபவமாகச் செய்துவிட்டார்.



இந்தியக் கோஷ்டித் தலைவர் விஜய மர்ச்சென்ட்

சிற்றுண்டி வேளைக்குப் பிறகு, சென்னை இரண்டாம் முறை ஆட ஆரம்பித்தபோது, ஆட்டக்காரர்களைவிடச் சபையோர்களே அதிக உற்சாகத்தைக் காண்பித்தனர். "பாலையா! பந்தை நன்றாக அடித்து ஆடவேண்டும், தெரிந்ததா?" என்று கூக்குரலிட்டார்கள். பாலையாவும் அவர்கள் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு அடித்து விளையாடினார். "மர்ச்சென்ட்! மோடியைக் கூப்பிட்டு 'போல்' பண்ணச் சொல்லுங்களேன்!" என்று சபையினர் சொன்னவுடனே மர்ச்சென்டும் அவ்விதமே செய்தார். மோடி வந்ததற்கும், பளிச்சென்று ஜான்ஸ்டன் வெளியேறுவதற்கும் சரியாயிருந்தது. இதிலிருந்து மோடி பந்தை எறிவதிலும் சூரர் என்பதுடன் சென்னை கிரிக்கட் ரஸிகர்கள் யோசனை சொல்வதில் நிபுணர்கள் என்பதும் வெளியாயிற்று.

இந்தக் கிரிக்கட் பந்தயத்தை வெற்றி—தோல்வி இல்லாமல் முடித்துக்கொண்டு, இலங்கை சென்றிருக்கும் அகில இந்தியக் கோஷ்டியார் இவ்வளவு குதூகலமாகவும், ஆனால் ஜயத்துடனும் விளையாடி விட்டுத் தாய்நாட்டுக்குத் திரும்புவார்கள் என்று நம்புகிறேன்.

[இந்தக் கிரிக்கட் விழாவில் பங்கெடுத்துக் கொண்ட பிரசித்தமான ஆட்டக்காரர்கள் சிலரின் விளையாட்டுத் தோற்றங்கள் அடுத்த இதழில் வெளியாகும்.]

வெளி வந்துவிட்டது! வெளி வந்துவிட்டது!

புதிய வெளியீடுகள்

வெண்டல் வில்கியின்

1. **"ஒரே உலகம்"**

மொழிபெயர்ப்பு:—தி. ஜ. ர.

உயர்ந்த பதிப்பு ரூ. 5—0—0
மலிவுப் பதிப்பு ரூ. 4—8—0

விற்பனை உரிமையாளர்:
தமிழ் நிலையம்
புதுக்கோட்டை

✶

2. கோதைத் தீவு ரூ. 2—0—0
[ஒரு கற்பனைச் சித்திரம்]
எழுதியவர்: **வ. ரா.**

3. மலரும் உள்ளம் ரூ. 0-12-0
[ஒரு கவிதைத் தொகுதி]
அழ. வள்ளியப்பா

4. நூர்ஜஹான் ரூ. 2—4—0
[உயர்தர நாடகம்]
துவிஜேந்திரலால்
மொழிபெயர்ப்பு: **ப. கி. விஜயராகவன்**

5. சூறாவளி ரூ. 1—4—0
[நாவல்]
சிரஞ்சீவி

6. டாடா ரூ. 2—4—0
[வாழ்க்கை வரலாறு]
இ. கே. நடேச சர்மா

★

புத்தக நிலையம்,
தெப்பக்குளம் :: திருச்சி.

சிவகாமியின் சபதம்

கல்கி

ஏழாம் அத்தியாயம்

மகேந்திர ஜாலங்கள்

காஞ்சிமாநகரில், சக்கரவர்த்தியின் பிரதான மந்திராலோசனை மண்டபத்தில் சபை கூடியிருந்தது. மந்திரி மண்டலத்தாரும் அமைச்சர் குழுவினரும் கூடியிருந்தார்கள். சக்கரவர்த்தியும் குமார சக்கரவர்த்தியும் சிம்மாசனங்களில் வீற்றிருக்க, அருகே ஒரு தனிப்பீடத்தில் சேனாபதி கலிப்பகையும் அமர்ந்திருந்தார்.

தளபதி பரஞ்சோதியை மட்டும் அங்கே காணவில்லை. கோட்டைப் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்தபடியால் அவரால் மந்திராலோசனைக்கு வர முடியவில்லை போலும்.

சபையில் கூடியிருந்தவர்கள் முகத்திலெல்லாம் இலேசாகக் கவலைக் குறி தோன்றியது.

எல்லாரையும் காட்டிலும் அதிகமான கவலை, சபையில் எழுந்து நின்ற பண்டகசாலை அமைச்சர் பராந்தக உடையார் முகத்தில் காணப்பட்டது.

"உடையாரே! முற்றுகை ஆரம்பிக்கும் சமயத்தில் நீர் உறுதியாகச் சொன்னீரல்லவா? குறைந்தது பதினைந்து மாதத்துக்கு வேண்டிய தானியாதிகளை நமது பண்டகசாலைகளில் பத்திரப்படுத்தியிருப்பதாக! —முற்றுகை ஆரம்பித்து ஏழு மாதம் தானே ஆகிறது? இன்னும் எட்டு மாதத்துக்கு இருக்க வேண்டுமே? மூன்று மாதத்துக்குத்தான் இருக்கும் என்று சொல்கிறீரே, அது எப்படி?" என்று சக்கரவர்த்தி கேட்டார். மகேந்திர பல்லவரின் குரல் முன்னெப்போதைக் காட்டிலும் கடுமை பெற்றிருந்தது. அவருடைய முகத்தில் சுருக்கங்கள் அதிகமாயிருந்தன.

பராந்தக உடையார் குரலில் கலக்கத்துடனும், சொல்லில் தடுமாற்றத்துடனும் கூறினார் :—"பல்லவேந்திரா! நான் எதிர்பார்த்தபடி சில காரியங்கள் நடக்கவில்லை; எதிர்பாராத காரியங்கள் சில நடந்து விட்டன. நகரை விட்டுப்போன ஜனங்கள் பலர், புள்ளலூர் சண்டைக்குப் பிறகு நகருக்குத் திரும்பி வந்து விட்டார்கள். அவர்களைத் தடுக்க முடியவில்லை. தொண்டைமண்டலத்திலுள்ள சிற்பிகள் அனைவரையும் தலைநகருக்குள்ளே கொண்டுவந்து சேர்க்க வேண்டுமென்று தங்கள் ஆக்ஞை பிறந்தது. இதனால் ஐயாயிரம் பேர் அதிகமானார்கள். நமது கடிகைகள் —கல்லூரிகள் எல்லாவற்றையும் மூடி, ஆசிரியர்களையும் மாணாக்கர்களையும் வெளியே அனுப்பி விடலாமென்று முதலில் யோசனை செய்திருந்தோம். கடைசி நேரத்தில் தாங்கள் அவ்விதம் செய்ய வேண்டாம் என்று கட்டளையிட்டு விட்டீர்கள். இதனால் பதினாயிரம் பேருக்கு அதிகப்படியாக உணவு தரவேண்டியதாகிவிட்டது......"

"இவ்வளவு தானா? இதனாலேயே ஐந்து மாதத்து உணவு குறைந்து போய்விட்டதா?"

"நானும் ஒரு பெரிய தவறு செய்து விட்டேன். நகரில் உள்ள புருஷர்கள், ஸ்திரீகள், குழந்தைகளை மட்டும் கணக்கெடுத்துக் கொண்டு, பதினைந்து மாதத்துக்கு உணவு இருப்பதாகச் சொன்னேன். கறவைப் பசுக்கள், கோயில் மாடுகள், குதிரைகள் இவற்றைக் கணக்கில் சேர்க்கவில்லை. மாடுகளுக்கும் குதிரைகளுக்கும் வைக்

கோலும் புல்லும் கிடைக்காதபடியால் தானியத்தையே தீனியாகக் கொடுக்க வேண்டியதாகி விட்டது."

"ரொம்ப நல்லது, பராந்தகரே! தொண்டைமான் இளந்திரையன் வம்சத்தில் வாழையடி வாழையாக வந்த மகேந்திர பல்லவன், சிம்ம விஷ்ணு மகாராஜாவின் புத்திரன், வாதாபி புலிகேசியிடம் சரணாகதியடைய நேர்ந்தால், அந்தப் பழியைக் கோயில் மாடுகள் மீதும், தேர்க் குதிரைகள் மேலும் போட்டு விடலாமல்லவா? ரொம்ப நல்லது!" என்று கூறிவிட்டுச் சக்கரவர்த்தி சிரித்தார். அந்தச் சிரிப்பில் கோபம் அதிகமாய்த் தொனித்ததா, ஏளனம் அதிகமாய்த் தொனித்ததா என்று சொல்வதற்கு முடியாமல் இருந்தது.

அப்போது நரசிம்மவர்மர் துள்ளி எழுந்து, "அப்பா! என்ன வார்த்தை சொன்னீர்கள்? வாதாபி புலிகேசியிடம் மகேந்திர பல்லவர் சரணாகதியடைவதா? எதற்காக? நாங்கள் எல்லாரும் எதற்காக இருக்கிறோம்? ஒரு லட்சம் பல்லவ வீரர்கள் ஏழு மாதமாக மூன்று வேளை உண்டும் உறங்கியும் இந்தக் கோட்டைக்குள்ளே எதற்காக அடைபட்டுக் கிடக்கிறார்கள்? தந்தையே! நமது பண்டகசாலை அமைச்சரின் கணக்குத் தவறு ஒரு விதத்தில் நல்லதாகவே போயிற்று. இப்போதாவது கட்டளையிடுங்கள். கோட்டைக்குள்ளே ஏழு மாதம் ஒளிந்துகொண்டிருந்தது போதும். உலகமெல்லாம் நம்மைப் பார்த்துச் சிரித்தது போதும். அப்பா! இப்போதாவது கட்டளையிடுங்கள்!" என்று ஆக்கிரமும் அழுகையுமாய்க் கூறி விட்டு, மகேந்திர பல்லவரின் முன்னால் தரையில் விழுந்து, அவருடைய பாதங்களைப் பற்றிக் கொண்டார்.

மகேந்திர பல்லவர் தமது கண்களில் துளித்த நீர்த் துளியை மறைப்பதற்காக முகத்தைப் பின்புறமாகத் திருப்பினார். ஒரு நொடிக்கெல்லாம் சக்கரவர்த்தி மீண்டும் சபையின் பக்கம் திரும்பியபோது அவர் முகத்தில் பழையபடி கடுமையும் ஏளனப் புன்னகையும் குடிகொண்டிருந்தன. தம் பாதங்களைப் பற்றிக் கொண்டு தரையில் கிடந்த மாமல்லனை அவர் தூக்கி நிறுத்தி, "மாமல்லா! உன்னை வெகு காலம் நான் அந்தப்புரத்திலேயே விட்டு வைத்திருந்தது பிசகாய்ப் போயிற்று. மூன்று தாய்மார்களுக்கு மத்தியில் நீ ஒரே மகனாக அகப்பட்டுக்கொண்டிருந்தாயல்லவா? அதனாலே தான் பெண்களுக்குரியவையான ஆத்திரமும் படபடப்பும் உன்னிடம் அதிகமாய்க் காணப்படுகின்றன. உலகில் வீரச் செயல்கள் புரிய விரும்பும் ஆண் மகனிடம் இத்தகைய படபடப்பும் ஆத்திரமும் இருக்கக் கூடாது. நரசிம்மா! மல்யுத்தத்தில் மகா நிபுணனான உனக்கு இதை நான் சொல்ல வேண்டுமா?" என்றார்.

மாமல்லருடைய உதடுகள் துடித்தன. தந்தையின் வார்த்தைகளுக்கு மறுமொழி சொல்ல அவருடைய உள்ளத்திலிருந்து வார்த்தைகள் பொங்கி வந்தன. ஆனால் அதிக ஆத்திரத்தினாலேயே அவரால் பேச முடியாமல் போய் விட்டது.

மகனுடைய நிலையைக் கண்ட மகேந்திர பல்லவர், "குழந்தாய்! நீண்டகாலமாகப் பொறுத்து வந்திருக்கிறாய்; இன்னும் சில நாள் பொறு. நீயும் நமது பல்லவ வீரர்களும் உங்களுடைய வீர தீரத்தையெல்லாம் காட்டுவதற்குரிய சந்தர்ப்பம் சீக்கிரத்தில் வரப் போகிறது. வாதாபிப் படை இன்னும் சில தினங்களுக்குள் கோட்டையைத் தாக்குமென்று எதிர்பார்க்கிறேன். அந்தத் தாக்குதல் வெகு கடுமையாயிருக்கும் என்றும் எண்ணுகிறேன். அதைச் சமாளிப்பதற்கு நாமும் நமது பூரண பலத்தையும் பிரயோகிக்க வேண்டியதாயிருக்கும். பல்லவர்களின் வீரத்துக்கு மகத்தான சோதனை வரப் போகிறது. அதற்கு நாம் எல்லாரும் ஆயத்தமாக வேண்டும்!" என்றார்.

இவ்விதம் மாமல்லனைப் பார்த்துக் கூறிய பிறகு, பண்டகசாலை அமைச்சர் பராந்தக உடையாரைப் பார்த்து மகேந்திர பல்லவர், "பராந்தகரே! இன்று முதல் காஞ்சி நகரில் உள்ளார் அனைவரும், மாடுகளும் குதிரைகளும் உள்பட சமண நெறியை மேற்கொள்வோமாக!" என்றதும், சபை

யில் இருந்த அனைவருக்குமே தூக்கி வாரிப் போட்டது.

"ஒரே ஒரு காரியத்தில் மட்டுந்தான் சொல்கிறேன். அதாவது இரவில் உணவு கொள்வதில்லை யென்ற சமண முனிவர்களின் விரதத்தை எல்லாரும் அனுஷ்டிக்க வேண்டும். இதுவரை நீங்கள் கொடுத்து வந்த உணவுப்படியில் மூன்றில் ஒரு பங்கைக் குறைத்து விடுங்கள். அரண்மனைக்கும் ஆலயங்களுக்கும் உள்படச் சொல்கிறேன். இனிமேல் காஞ்சி நகரில் உள்ளவர்களுக்கெல்லாம் தினம் இரண்டு வேளை தான் உணவு. இதன் மூலம் கைவசமுள்ள தானியத்தை நாலரை மாதத்துக்கு வரும்படி செய்யலாமல்லவா? மந்திரிமார்களே! நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" என்று சக்கரவர்த்தி கேட்கவும், முதன் மந்திரி சாரங்க தேவர், "பிரபு! போர் வீரர்களின் படியில் மூன்றில் ஒரு பங்கு குறைத்து, மற்றவர்களின் படியை அரைவாசியாகக் குறைத்து விடலாமென்று நாங்கள் யோசித்துக் கொண்டிருந்தோம். ஆனால் கோட்டை முற்றுகை நாலரை மாதத்துக்கு மேல் நீடிக்காதென்று தாங்கள் அபிப்பிராயப்படுவதாகத் தெரிகிறது" என்றார்.

"இல்லை; நாலரை மாதங்கூட நீடிக்குமென்று நான் நினைக்கவில்லை. முன் ஜாக்கிரதையாகத்தான் உணவை மூன்றில் ஒரு பங்கு குறைக்கலாமென்று சொன்னேன்! மந்திரிகளே! அமைச்சர்களே! புலிகேசி இன்னும் ஒரு வாரத்தில் கோட்டையைத் தாக்கத் தொடங்குவான் என்று எதிர்பார்க்கிறேன்......"

"பிரபு! அப்படித் தாங்கள் எதிர்பார்ப்பதற்குத் தக்க காரணங்கள் இருக்கத்தான் வேண்டும்" என்றார் சாரங்க தேவர்.

"ஆம்; அவற்றை உங்களுக்கும் சொல்ல விரும்புகிறேன். சபையோர்களே! உணவு நெருக்கடியைப் பொறுத்த வரையில் நம்மைக் காட்டிலும் புலிகேசியின் நிலைமை ஆபத்தானது. வாதாபிப் படைகள் மூன்று மாச காலமாக அரை வயிறு உணவுண்டுதான் ஜீவித்து வருகிறார்கள். புலிகேசி வாதாபியிலிருந்து கிளம்பிய போது, ஐந்து லட்சம் வீரர்களுடனும் பதினையாயிரம் யானைகளுடனும் புறப்பட்டான். இப்போது வாதாபிப் படையில் மூன்றரை லட்சம் வீரர்கள் தான் இருக்கிறார்கள் பதினாயிரம் யானைகள் மட்டுமே இருக்கின்றன. சபையோர்களே! இன்னும் ஒரு மாசம் போனால் இவர்களில் பாதிப் பேர் பஞ்சத்திலும் நோயிலும் மடிந்து போவார்கள். யானைகளின் கதி என்ன ஆகுமோ தெரியாது. ஆகையால், புலிகேசி சீக்கிரத்தில் கோட்டையைத் தாக்கித்தான் ஆக வேண்டும். இந்தத் தாக்குதல் வெகு மூர்க்கமாய் இருக்குமென்பதிலும் சந்தேகம் இல்லை."

அப்போது முதல் அமைச்சர் ரணதீர பல்லவராயர், "பல்லவேந்திரா! இந்த மாதிரி அதிசயத்தை இவ்வுலகம் எப்போதும் கேள்விப்பட்டதில்லை. முற்றுகைக்கு உள்ளானவர்கள் பசி பட்டினிக்காளாகி மடிவதுண்டு; எதிரியிடம் சரணம் அடைவதும் உண்டு. ஆனால் முற்றுகை இடுகிறவர்கள் பட்டினிக்கு ஆளானார்கள் என்று கதைகளிலே கூடக் கேட்டதில்லை" என்றார்.

"ஆம்; பல்லவராயரே! திரிபுரம் எரித்த பெருமானின் அருளினால் அம்மாதிரி அதிசயம் நடந்திருக்கிறது. தொண்டை மண்டலத்துக் கிராமங்களில் உள்ள ஜனங்கள் என்ன அதிசயமான தைரியத்தைக் காட்டியிருக்கிறார்கள், தெரியுமா? எதிரிகளுக்கு ஒரு ஆழாக்கு அரிசி, ஒரு பிடி கம்பு கொடுக்கவும் அவர்கள் மறுத்திருக்கிறார்கள். கையிலுள்ள தானியத்தையெல்லாம் வெகு பத்திரமாகப் புதைத்து வைத்திருக்கிறார்கள். சபையோர்களே! தொண்டை மண்டலத்து ஏரிகள்கூட நமக்குப் பெரிய ஒத்தாசை செய்திருக்கின்றன. சென்ற தை மாதத்தில் எக்காரணத்தினாலோ நம் நாட்டு ஏரிகள் எல்லாம் திடீர் திடீரென்று உடைத்துக் கொண்டுவிட்டன. அப்படி ஏற்பட்ட உடைப்பு வெள்ளத்தினால் வாழைத் தோட்டங்கள், தென்னந் தோப்புகள் எல்லாம் பாழாயின. அதோடு, கோடைகாலத்துச் சாகுபடியும் நடக்கவில்லை. இதனாலெல்லாம் புலிகேசியின்

போர் வீரர்களுக்கும் சரி, போர் யானைகளுக்கும் சரி, உணவு கிடைப்பது குதிரைக் கொம்பாகப் போய் விட்டது!"

சேனாபதி கலிப்பகை எழுந்து, "சபையோர்களே! தொண்டைமண்டலத்து ஏரிகள் நமது கட்சியில் சேர்ந்து உடைத்துக் கொண்டு பகைவர்களைப் பட்டினிக் குள்ளாக்கியது உண்மைதான். ஆனால் அவை தாமாக உடைத்துக் கொள்ளவில்லை. நமது விசித்திர சித்த மன்னரின் மாயாஜால வித்தையினால்தான் அவை உடைத்துக் கொண்டன" என்றார்.

"நான் செய்தது ஒன்றுமில்லை, சத்ருக்னனுடைய தலைமையில் நமது ஒற்றர் படை வெகு நன்றாய் வேலை செயதிருக்கிறது. தொண்டை மண்டலத்திலுள்ள கோட்டத் தலைவர்களும் வெகு திறமையுடன் காரியம் செய்திருக்கிறார்கள். நாட்டில் பஞ்சம் வந்தாலும் வரட்டும் என்று ஏரிகள், அணைக்கட்டுக்கள் எல்லாவற்றையும் அவர்கள் வெட்டி விட்டிருக்கிறார்கள். இந்த வருஷம் கோடைகாலத்தில் ஒரு குழி நிலங்கூட சாகுபடி செய்யப்படவில்லை! சபையோர்களே! தொண்டை மண்டலத்துப் பிரஜைகள் இந்த யுத்தத்தில் செய்திருக்கும் உதவிக்கு நான் நூறு ஜன்மம் எடுத்து அவர்களுக்குத் தொண்டு செய்தாலும் ஈடாகாது" என்று சக்கரவர்த்தி கூறியபோது அவருடைய குரல் உணர்ச்சியினால் தழுதழுத்தது.



சற்று நேரம் சபையில் மௌனம் குடி கொண்டிருந்தது. பிறகு முதல் மந்திரி சாரங்கதேவர், "பல்லவேந்திரா! புலிகேசி பாண்டியனைச் சந்திக்கக் கொள்ளிடக் கரைக்

குச் சென்றிருப்பதாகத் தெரிகிறதே! பாண்டியன் ஒருவேளை வாதாபிப் படைக்கு வேண்டிய உணவுப்பொருள் கொடுக்கலாம் அல்லவா?" என்றார்.

"ஆம், மந்திரி! பாண்டியனிடம் உணவுப் பொருள் உதவி கோருவதற்காகத்தான் புலிகேசி தெற்கே போயிருக்கிறான். ஆனால், அந்த உதவி அவனுக்குக் கிடைக்கும் என்று நான் கருதவில்லை. தவிரவும், புலிகேசி சீக்கிரத்தில் வாதாபிக்குத் திரும்பவேண்டிய காரணங்களும் ஏற்பட்டிருக்கின்றன."

"பல்லவேந்திரா! அந்தக் காரணங்கள் என்னவென்று நாங்களும் தெரிந்து கொள்ளலாமா?" என்று முதல் அமைச்சர் கேட்டார்.

"உங்கள் எல்லாருக்கும் தெரிந்திருக்க வேண்டியதுதான். சபையோர்களே! மிகவும் முக்கியமான செய்தி: உத்தராபதத்தின் சக்கரவர்த்தி ஹர்ஷவர்த்தனர் சளுக்க ராஜ்யத்தின்மீது படையெடுக்கக் கூடுமென்று புலிகேசிக்குச் செய்தி வந்திருக்கிறது. புலிகேசியின் சகோதரன் விஷ்ணுவர்த்தனன் வேங்கியிலிருந்து அவ்விதம் ஓலை அனுப்பியிருக்கிறான்."

இந்தச் செய்தியைக் கேட்டதும் சபையில் ஒரு பெரும் கிளர்ச்சி உண்டாயிற்று. மாமல்லர் உள்பட எல்லாருமே அதிசயத்தில் மூழ்கினார்கள்.

சாரங்கதேவ பட்டர், "பல்லவேந்திரா! இதுவும் தங்களுடைய காரியந்தான் என்று நினைக்கிறேன். ஹர்ஷவர்த்தனருக்குத் தாங்கள் ஓலை அனுப்பினீர்களா?" என்று கேட்டார்.

"அந்த மகா புருஷருக்கு ஓலை அனுப்பத்தான் விரும்பினேன். ஆனால் கன்யாகுப்ஜத்திற்குத் தூது அனுப்பிச்



செய்தி வருவதென்றால் அது இலேசான காரியமா? அவகாசந்தான் போதுமா? அதற்குப் பிரதியாக, இன்னொரு காரியம் செய்தேன். வேங்கிப் பட்டணத்துக்கு ஆள் அனுப்பினேன்" என்று சக்கரவர்த்தி கூறிய போது சபையில் திகைப்பு உண்டாயிற்று.

முதல் மந்திரி "பிரபு! தங்களுடைய காரியம் எங்களுக்கு விளங்கவில்லையே?" என்றார்.

"அப்படியானால் விளங்கும்படியாகச் சொல்லுகிறேன், கேளுங்கள்: வேங்கிப் பட்டணத்துக்கு நான் அனுப்பிய ஆள், அங்கே சத்திரம் சாவடிகளில், 'காஞ்சி பல்லவன் கன்யாகுப்ஜத்துக்குத் தூது அனுப்பியிருக்கிறோம்; ஹர்ஷவர்த்தனர் சளுக்க ராஜ்யத்தின்மேல் படையெடுக்கப் போகிறாராம்!' என்ற வதந்தியைப் பரப்பினான். நான் எதிர்பார்த்ததுபோல், விஷ்ணுவர்த்தனன் அதை நம்பிப் புலிகேசிக்கு ஓலை அனுப்பினான்."

"பிரபு! தங்களுடைய மகேந்திர ஜால வேலைகளுக்கு எல்லையே இல்லை போல் இருக்கிறது. வேங்கி ஓலையில் என்ன எழுதியிருந்ததென்றும் தங்களுக்குத் தெரியுமா?"

மகேந்திர பல்லவர் புன்னகையுடன், "அது தெரியாவிடில் என்ன பிரயோஜனம்? அந்த ஓலை கொண்டு வந்த வேங்கி ஒற்றனை வழியில் நமது ஒற்றர் தலைவன் சத்ருக்னன் வழி மறித்து ஓலையைக் கைப்பற்றினான். ஓலையில் எழுதியிருந்த விஷயம் எதிர்பார்த்தபடி இருக்கவே, ஓலையுடன் தூதனை விட்டு விட்டான்" என்றார்.

"பிரபு! ஓலை புலிகேசிக்குப் போய்ச் சேர்ந்துவிட்டதா?" என்று சேனாபதி கலிப்பகை கேட்க, மகேந்திர பல்லவர் கூறினார்: "அதைத் தெரிந்துகொள்வதற்காகத் தெற்கே ஆள் அனுப்பியிருந்தேன். இன்றைக்கு அவன் திரும்பி வரவேண்டிய கெடு. சபையோர்களே! ஒவ்வொரு நிமிஷமும் தெற்கேயிருந்து செய்தி எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்!" என்று சொல்லிக்கொண்டே மகேந்திர பல்லவர் மண்டபத்தின் வாசற் பக்கத்தைப் பார்த்து, "ஆ! இதோ செய்தி வருகிறது" என்றார்.

காவலன் ஒருவன் உள்ளே வந்து, சக்கரவர்த்திக்கு அடி வணங்கி, அவருடைய காதோடு ஏதோ இரகசியமாகச் சொன்னான். சாதாரணமாக எந்தச் சந்தர்ப்பத்திலும் ஆச்சரியத்தின் அறிகுறியைக் காட்டாத மகேந்திர பல்லவரின் முகம், மேற்படி காவலன் கூறியதைக் கேட்டதும் எல்லையற்ற வியப்பைக் காட்டியது.

"சபையோர்களே! நீங்களாவது நானாவது சற்றும் எதிர்பாராத அதிசயமான செய்தி வந்திருக்கிறது. என்னாலேயே நம்ப முடியவில்லை. விசாரித்து உண்மை தெரிந்து கொள்ளப் போகிறேன். இப்போது சபை கலையட்டும். இன்றிரவு மறுபடியும் சபை கூடவேண்டும். அப்போது எல்லாம் விவரமாகச் சொல்லுகிறேன். விடை கொடுங்கள். மாமல்லா! நீயும் அரண்மனைக்குப் போய் உன் தாய்மார்களைப் பார்த்துவிட்டு வா!" என்று கூறிக்கொண்டே மகேந்திர பல்லவர் எழுந்து சபா மண்டபத்தின் வாசலை அடைந்து, அங்கு ஆயத்தமாய் நின்ற குதிரைமீதேறித் தெற்குக் கோட்டை வாசலை நோக்கி விரைந்து சென்றார்.


அழகுக்கு
அழகு செய்வார்
உண்டோ!
உண்மை எழில் பொன்னணிகளிலும் பட்டாடைகளிலுமன்று - இவைகள் எவ்வளவு விலை உயர்ந்தவைகளாயினும், இயற்கையாக இல்லாத வசீகரத்தை உண்டு பண்ண முடியா. மாசற்ற காந்தியுடன் விளங்கும் வதனமொன்றே மெல்லியரின் அற்புத வனப்பிற்கு இன்றியமையாததாகும்.
மென்மலரிதழ் போன்ற வதன சௌந்தரியம் பெற பாண்ட்ஸ் க்ரீம்கள் நிச்சயமாக உதவுமென்பது அனுபவத்திற் கண்டறிந்த விஷயம். உபயோகித்துப் பாருங்கள். சொற்ப வாரங்களுள் உங்கள் வதனம் என்றுமில்லா மிருதுத்துவமும் புதுமை காந்தியும் வாய்ந்து விளங்கும்.
பாண்ட்ஸ் கோல்ட் க்ரீம்:
பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம்:
பாண்ட்ஸ்
க்ரீம்

P. 2339. I

கண்ணன் தூது

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

சமாதானம் பேசக் கோவிந்தன் தேர் ஏறி ஹஸ்தினபுரம் புறப்பட்டான். கூட சாத்யகியும் போனான்.

புறப்படுவதற்கு முன் கிருஷ்ணன் வெகுநேரம் பாண்டவர்களுடன் பேசிக் கொண்டிருந்தான். வீரனான பீமன் கூட, "குல நாசம் வேண்டாம். சமாதானமாகப் போவதே மேலானது" என்றான். ஆனால் திரௌபதிக்குத் தான் பட்ட அவமானத்தைப் பொறுக்க முடியவில்லை. தலை மயிரைக் கையால் பிடித்துக் கொண்டு கிருஷ்ணன் முன் நின்றான். "மதுசூதனனே! இந்தக் கூந்தல் கற்றையைப் பார்த்துச் செய்ய வேண்டியதைச் செய்வாய். அருச்சுனனும் பீமசேனனும் யுத்தம் வேண்டாம் என்றாலும் என்னுடைய தகப்பனார் கிழவராயினும் என் ஐந்து மக்களைத் துணையாகக் கூட்டிக் கொண்டு யுத்தம் நடத்துவார். என் தகப்பனாரும் வேண்டியதில்லை. அபிமன்யுவை முன்னிட்டுக் கொண்டு என் புத்திரர்களே கௌரவர்களை எதிர்த்துப் போர்செய்து ஜெயிப்பார்கள். மூள்கின்ற கோபத் தீயைப் பதின்மூன்று வருஷம் என் மனத்தினுள் அடக்கி வைத்தேன். இனித் தாங்காது" என்றான்.

பீமனும் அருச்சுனனும் யுத்தம் செய்யும் ஆற்றல் படைத்த வீரர்கள். அவர்கள் சமாதானத்தை விரும்புவது சகஜம். ஆற்றல் குறைந்தவர்களுக்கே எப்போதும் கோபம் அதிகம். கண்ணீரால் தடைப்பட்ட குரலில் திரௌபதி சொன்னதைக் கேட்ட வாசுதேவன் "அழவேண்டாம்! திருதராஷ்டிர புத்திரர்கள் என் சமாதானப் பேச்சைக் கேட்கப் போவதில்லை. நாய் நரிகளுக்கு இரையாக அவர்கள் அனைவரும் பூமியில் படுக்கப் போகின்றனர். பழி தீர்த்து வெற்றியைப் பார்க்கப் போகிறாய். வெகு சில நாட்களே தாமதம்!" என்றான். திரௌபதி திருப்தி அடைந்தான்.

குசஸ்தலம் என்கிற நகரத்தண்டை மாதவன் குதிரைகளை அவிழ்த்துவிட்டு ஒரு இரவு அங்கே தங்கினான். கோவிந்தன் வருகிறான் என்று செய்தி வந்ததும் ஹஸ்தினபுரம் பரபரப்பு அடைந்தது. திருதராஷ்டிரன் நகரத்தை அலங்காரம் செய்ய உத்தரவிட்டான். ஜனங்கள் ஜனார்த்தனனை எதிர் கொண்டு வரவேற்பதற்கு இன்னும் எல்லாவித உபசாரங்களுக்கும் ஏற்பாடு செய்தான்.

துரியோதனனுடைய மாளிகையை விடத் துச்சாதனனுடைய வீடு பெரியதாகவும் அழகாகவும் இருந்தபடியால் கிருஷ்ணனும் பரிவாரமும் தங்குவதற்கு அதைத் தயாரிக்கச் சொன்னான். பல உபசார மண்டபங்கள் ஊருக்கு வெளியில் கிருஷ்ணன் தேர் வரும் வழியில் கட்டப்பட்டன.

விதுரனோடு திருதராஷ்டிரன் மந்திராலோசனை செய்தான். "கோவிந்தனுக்குத் தேர்களும் யானைகளும் கொடுக்க ஏற்பாடு செய்யுங்கள். இன்னும் பலவிதமான சன்மானங்களும் செய்ய வேண்டும்" என்று திருதராஷ்டிரன் சொன்னான். விதுரன் "இதுவெல்லாம் வஞ்சக யோசனைகள். கோவிந்தன் இதற்கெல்லாம் வசப்படமாட்டான். எந்தப் பொருளுக்காகக் குருதேசத்திற்குக் கேசவன் வருகிறானோ அதை உதவக் கடவீர். துரியோதனனுக்கும் பாண்டவர்களுக்கும் சமாதானத்தை விரும்பியல்லவா வருகிறான்? அதைச் செய்து கொடுப்பீராக. மாதவனுக்கு வேறு வித சன்மானங்கள் செய்து திருப்தி செய்ய முடியாது" என்றான்.

கோவிந்தன் ஹஸ்தினபுரம் போய்ச் சேர்ந்தான். நகரத்து ஜனங்கள் அலங்கரிக்கப்பட்ட வீதிகளில் கூட்டமாகத் திரண்டிருந்தபடியால் தேர் வெகு மெள்ளச் சென்றது. கிருஷ்ணன் முதலில் திருதராஷ்டிரனுடைய அரண்மனைக்குச் சென்றான். அவ்விடம் அளிக்கப்பட்ட பூஜையைப் பெற்றுக்கொண்டு விதுரனுடைய மாளிகைக்குப் போனான். குந்திதேவி கிருஷ்ணனைக் கண்டதும் மக்களை நினைத்துத் துக்கம் மேலிட்டு அழுதாள்.

கிருஷ்ணன் அவளைத் தேற்றி விடை பெற்றுக்கொண்டு துரியோதனனுடைய அரண்மனைக்குச் சென்றான். துரியோதனன் கோவிந்தனை உபசரித்துத் தன் கிருகத்தில் சாப்பிட அழைத்தான். கண்ணன் சிரித்துக் கொண்டு "தூதர்கள் காரியம் நிறைவேறின பிறகே புசிப்பர். நான் வந்த காரியம் நிறைவேறின பிறகு

"நீ எனக்கு விருந்து அளிப்பாய்" என்று சொல்லித் துரியோதனனுடைய அழைப்பை மறுத்து விட்டு விதுரன் மாளிகைக்குத் திரும்பிப்போய் அங்கே புசித்து இளைப்பாறினான்.

பிறகு விதுரனும் கண்ணனும் விஷயாலோசனை செய்தார்கள். பீஷ்மரும் துரோணர் முதலியோரும் தன்னை விட்டு விலக மாட்டாதவர்களாய் இருந்து வருவதால் துரியோதனன் கர்வம் கொண்டிருப்பதாயும், அவனிடம் சமாதானப் பேச்சுப் பேசுவதில் பயனில்லை என்றும், துஷ்டருடைய சபையில் கோவிந்தன் பிரவேசிப்பதே தவறு என்றும் விதுரன் சொன்னான். கண்ணனுடைய உயிருக்குத் துரியோதனாதியர்கள் ஏதேனும் வஞ்சனை செய்து அபாயம் தேடுவார்கள் என்று அவர்களுடைய குணத்தை அறிந்த எல்லாரும் சந்தேகப் பட்டார்கள். "நீர் சொல்லுவதெல்லாம் உண்மை. சமாதானம் செய்துவிட முடியும் என்று எண்ணி நான் வரவில்லை. உலகம் பழி சொல்லாமலிருக்கவே வந்தேன். என் உயிரைப் பற்றிக் கவலை வேண்டாம்" என்றான் கண்ணன்.



மறு நாட் காலையில் துரியோதனனும் சகுனியும் "மன்னர் உங்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்" என்று வந்து அழைத்ததும் கோவிந்தனும் விதுரனுடன் சபைக்குச் சென்றான்.

வாசுதேவன் சபையில் பிரவேசித்ததும் அனைவரும் எழுந்து உபசரித்தார்கள். பெரியோர்களனைவரையும் கண்ணன் நமஸ்கரித்து ஆசனத்தில் அமர்ந்தான். உபசாரங்கள் முடிந்ததும் கோவிந்தன் எழுந்து திருதராஷ்டிரனை நோக்கித் தான் வந்த காரியத்தை எடுத்துச் சொன்னான். பாண்டவர்களின் கோரிக்கையை விவரித்துத் தெரியப்படுத்தினான். "அரசனே! பிரஜைகளை நாசம் பண்ணுகிறீர். உமக்கு எது நன்மையோ அதைத் தீமையாகவும், எது தீமையோ அதை நன்மையாகவும் நினைக்கிறீர். புத்திரர்களை அடக்கி ஆளவேண்டியது உம்முடைய கடமை. பாண்டவர்கள் யுத்தத்திற்குத் தயாராகவே இருக்கிறார்கள். ஆனால் சமாதானத்தை விரும்புகிறார்கள். உமக்குக் கீழ்ப்பட்டுச் சந்தோஷமாக இருக்க விரும்புகிறார்கள். அவர்களையும் புத்திரர்களாகப் பாவித்து நீர் பாக்கியவானாவதற்கு வழி தேடவும்" என்றான்.

திருதராஷ்டிரன்: "சபையோர்களே! என் பேரில் குற்றமில்லை. மாதவன் சொல்லுவதையே நானும் விரும்புகிறேன். ஆனால் நான் சக்தி இல்லாதவனாக இருக்கிறேன். துஷ்ட புத்திரர்கள் என் சொல்லைக் கேட்கவில்லை. கிருஷ்ணனே! நீயே இந்தத் துரியோதனனுக்குச் சொல்ல வேண்டும்" என்றான்.

கிருஷ்ணன்: "துரியோதனா! மகான்களுடைய குலத்தில் பிறந்திருக்கிறாய், தருமத்தைப் பின்பற்றி நடப்பாயாக. நீ எண்ணுவதெல்லாம் இழி குலத்தாருக்கே தகும். உன் நிமித்தம் புகழ் பெற்ற இந்தக் குலம் அழியப் போகிறது. பாண்டவர்கள் உன்னை இளவரச பதவியிலும் திருதராஷ்டிரனை மகாராஜன் என்கிற பதவியிலும் ஸ்தாபனம் செய்வார்கள். பாண்டவர்களுக்குப் பாதி ராஜ்யத்தைக் கொடுத்துச் சமாதானம் செய்து கொள்" என்றான்.

பீஷ்மரும் துரோணரும் கோவிந்தன் சொல்லைக் கேட்கும்படி துரியோதனனை வற்புறுத்தினார்கள். விதுரன் "துரியோதனனுடைய செயல்களினால் துக்கமடைந்து வரும் காந்தாரியைப் பற்றியும் திருதராஷ்டிரனைப் பற்றியுமே நான் வருந்துகிறேன்" என்றான்.

திருதராஷ்டிரன் மறுபடியும் மகனைக் கண்டித்து "கோவிந்தன் சொல்லைக் கேளாமற் போனால் குலத்துக்கு நாசமே உண்டாகும்" என்று சொன்னான்.

பீஷ்மரும் துரோணரும் மீண்டும் மீண்டும் துரியோதனனுக்கு நல்லுபதேசம் செய்தார்கள். "சமாதானம் செய்துகொள்ளுவதே உபாயம். யுத்தம்

"வேண்டாம்" என்று பலவாறு அவனுக்குச் சொல்லிப் பார்த்தார்கள். அனைவரும் பேசியபின் துரியோதனன் எழுந்தான். "மதுசூதனரே, பாண்டவர்களிடம் உமக்குள்ள அன்பினால் என்னைப் பலவாறாகத் தூஷிக்கிறீர். சபையிலுள்ள அனைவரும் என்னையே குற்றம் சொல்லுகிறார்கள். என்னிடம் இந்த விஷயத்தில் சிறிதும் குற்றமிருப்பதாக நான் காணவில்லை. பாண்டவர்கள் பிரியத்துடன் ஏற்றுக் கொண்ட ஆட்டத்தில் தோல்வியடைந்து ராஜ்யத்தை இழந்தார்கள். அதில் என்னுடைய குற்றம் என்ன? ஆட்டத்தில் தோல்வியடைந்து வனம் சென்றார்கள். எந்தக் குற்றத்தை நான் செய்ததற்காக இப்போது எங்களைக் கொல்ல விரும்புகிறார்கள்? படைகளைச் சேர்த்துக் கொண்டு எங்களைப் பயமுறுத்த முடியாது. நான் சிறுவனாக இருந்த காலத்தில் அவர்களுக்கு உரிமையில்லாத ராஜ்யம் கொடுக்கப்பட்டது. அறியாமையினாலோ பயத்தினாலேயோ கொடுக்கப்பட்டது. அப்போது அதற்கு இசைந்தேன். அதை இழந்தார்கள். திருப்பிக் கொடுக்க நான் இசைய மாட்டேன். என்மேல் யாதொரு குற்றமுமில்லை. பாண்டவர்களுக்கு ஊசி குத்தும் இடமும் நாங்கள் தரமாட்டோம்" என்றான்.

கோவிந்தன் சிரித்துவிட்டு "மூடனே! சகுனியுடன் சேர்ந்து வஞ்சனையாகச் சூதாட்டத்தை ஏற்படுத்தினாய். திரௌபதியைச் சபைக்கு வரவழைத்துத் தகாத மொழிகளைச் சொல்லி அவமானப்படுத்தினாய். யாதொரு குற்றமும் செய்யவில்லை என்றும் சொல்லுகிறாய்" என்று துரியோதனன் பாண்டவர்களுக்குச் செய்த அநீதிகளையெல்லாம் விவரமாக நினைவூட்டினான். பீஷ்மர் முதலியோர் எல்லாரும் கிருஷ்ணனுடைய குற்றச் சாட்டை ஒப்புக் கொள்வதைப் பார்த்த துச்சாதனன் எழுந்து, "அண்ணா! இவர்கள் உன்னைக் கட்டிப் பாண்டவர்களிடம் கொடுத்து விடுவார்கள் போல் தோன்றுகிறது. எழுந்து வா, வெளியே போவோம். நாம் இங்கே இருக்கத் தகுதியில்லை" என்றான்.

துச்சாதனன் இதைச் சொன்னதும் தம்பிகளுடன் துரியோதனன் சபையை விட்டு வெளியே போய்விட்டான்.

கோவிந்தன் சபையோரைப் பார்த்து மறுபடி "மகான்களே! கம்ஸனும் சிசுபாலனும் மாண்டதனால் யாதவர்களும் விருஷ்ணிகளும் சுகமாக வாழ்கின்றனர். ஒரு குலத்தைக் காப்பாற்றுவதற்காகச் சில சமயம் அதைச் சேர்ந்த ஒருவனைத் தியாகம் செய்ய வேண்டியதாக நேரிடும். ஒரு தேசத்தைக் காப்பாற்ற ஒரு கிராமத்தைச் சில சமயம் விட வேண்டியதாகும் அல்லவா? இந்தத் துரியோதனனை நீங்கள் தியாகம் செய்ய வேண்டியது அவசியம். அதுவே குலத்தைக் காப்பாற்றும் வழி" என்றான். திருதராஷ்டிரன் விதுரனைப் பார்த்து, "அப்பனே, காந்தாரியை அழைத்து வா! அவள் தீர்க்கதரிசி. அவள் சொல்லையாவது ஒருவேளை துரியோதனன் கேட்பானோ பார்க்கலாம்" என்றான். காந்தாரியை அழைத்து வரச் சேவகர்கள் சென்றார்கள்.

காந்தாரியும் வந்து அவளும் திருதராஷ்டிரனும் இருவருமாகத் துரியோதனனைச் சபைக்குத் திரும்பி வரச் சொல்லியனுப்பினார்கள். கண்கள் சிவந்தவனாகச் சபையில் மறுபடியும் துரியோதனன் பிரவேசித்தான். காந்தாரியும் மகனைப் பார்த்து அநேகவிதமாக உபதேசித்தாள். துரியோதனன் "முடியாது!" என்று சொல்லிச் சபையை விட்டு மறுபடியும் விலகிப் போனான்.

• • •

சபையை விட்டு வெளியே போன துரியோதனன் தன் நண்பர்களுடன் சதியாலோசனை செய்து தூதனாக வந்த கோவிந்தனைக் கட்டி அவமானப்படுத்த ஏற்பாடு செய்தான். இந்தச் செய்தி சபைக்கு வந்தது. கோவிந்தன் சிரித்துத் தன் விசுவரூபத்தைக் காட்டினான். அச்சமயம் குருடனான திருதராஷ்டிரனும் கண்கள் பெற்று விசுவரூபத்தைக் கண்டான் என்கிறார் வியாசர்.

"ஓ! புண்டரீகாக்ஷா! உம்முடைய விசுவரூபத்தைப் பார்த்த இந்தக் கண்கள் மற்ற எதையும் இனிப் பார்க்க விரும்பவில்லை. என்னுடைய நேத்திரங்கள் மறுபடியும் மறைந்து போகப் பிரார்த்திக்கிறேன்" என்று திருதராஷ்டிரன் வேண்டிக் கொள்ள, அப்படியே மறுபடியும் அந்தகனானான். "நம்முடைய முயற்சிகள் எல்லாம் வீண், துரியோதனன் கேட்கமாட்டான்" என்று திருதராஷ்டிரன் கோவிந்தனிடம் வருத்தப்பட்டுச் சொல்லிய பின் கிருஷ்ணன் வரச் சாத்யகியும் விதுரனும் கூடச் செல்ல, சபையை விட்டுப் போனான். கண்ணன் அங்கிருந்து குந்திதேவியிடம் சென்று நடந்ததையெல்லாம் அவளிடம் தெரிவித்தான். அவளும் புத்திரர்களுக்குத் தன் ஆசியைச் சொல்லச் சொன்னாள். "க்ஷத்திரிய ஸ்திரீயானவள் எதற்காகப் பிள்ளைகளைப் பெறுகிறாளோ அதற்குரிய காலம் வந்து விட்டது. என் புத்திரர்களைக் காக்கக் கடவாய்" என்றாள்.

பிறகு, புருஷோத்தமன் தன்னுடைய ரதத்தில் ஏறி உபப்பிலாவ்ய நகரத்தை நோக்கி விரைவாகச் சென்றான்.



WAR . . .
FOOD . . .
FUEL . . .
CLOTHES . . .
SERVANTS . . .
அவளது பிரச்னைகள்
மிகவும் அதிகம்
இந்தியன்
டீ
சோர்வடையும் சமயம்
டீ அருந்துங்கள்
இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது.
IK 836TH



இந்தியத் தேயிலையில்

மிகச்சிறந்தது

மிக நேர்த்தியான மணமும், நல்ல நிறமும், குறைந்த விலையும் உள்ள லிப்டன்ஸ் வெள்ளை லேபில் தேயிலைகள் இதர தேயிலைகளை விட சிறந்தவை.



லிப்டன்ஸ்

வெள்ளை லேபில்

நேர்த்தியான இந்திய தேயிலை

என் சரித்திரம்



என் கதையை எழுதுபவர் ஒருவரும் இல்லை. அதனால், நானே சொல்ல வேண்டி நேர்ந்தது. அப்பொழுது மதுரை ஜில்லாவில் காலரா தாண்டவம் புரிந்து கொண்டிருந்த சமயம். கணவனை இழந்தவர்களும், குழந்தைகளைப் பலி கொடுத்தவர்களும் 'கோ' வெனக் கதறிக் கொண்டிருந்தார்கள். மனித வர்க்கத்தின் மீது வஞ்சம் தீர்த்துக் கொள்வது போலத்தான் அது காரியங்களை நடத்திக் கொண்டு போயிற்று.

விதிக்கு என்மேல் என்ன கோபமோ தெரியவில்லை. முதல் நாள் ராத்திரி என் கையால் அவருக்குச் சாதம் பரிமாறினேன். மறுநாள் ராத்திரி அநாதையாய்க் கையைப் பிசைந்துகொண்டு நின்றேன்.

எனக்கு அப்பொழுது வயது பதினைந்து. சிறுவயதிலேயே, விவாகம் ஆன ஆறு மாதத்தில் கணவனை இழந்து நின்றேன். என்னால் அழவும் முடியவில்லை. உன்மத்தம் பிடித்தவள் போல இருந்தேன்.

என் பக்கத்து வீட்டில் ஒரு பெரியவர் இருந்தார். துக்கப்படுபவர்களைக் கண்டால் அவர் கண்களில் நீர் பெருகும்; அநாதைகளைக் கண்டால் அவர் ஹிருதயம் உருகும். என் கோலத்தைக் கண்டு அவர் இடி விழுந்தவர் போலானார்.

"குழந்தை! கடவுள் நம்மைச் சோதித்துக் கொண்டிருக்கிறார். அறுபது வயதுக் கிழவனான நான் இருக்கிறேன். என்னைக் கொண்டு போகலாம் அல்லவா? உன் கணவனை ஏன் அம்மா கொண்டு போகவேண்டும்? நடந்ததை நினைத்து வருந்தாதே. மதுரையிலிருக்கும் உன் சித்தன்னையிடம் நான் உன்னைச் சேர்ப்பிக்கிறேன்" என்றார் அவர்.

நான் செயலற்று நடுங்கும் கைகளுடன் மூட்டை கட்ட ஆரம்பித்தேன். தடியை ஊன்றிய வண்ணம் பெரியவர் வாசல் திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருந்தார். வைகாசி மாதம். ஆகாயத்தில் மேகங்களைக் காண முடியவில்லை. நிர்மலமான ஆகாயம் நீருக்குப் பதிலாக நெருப்பைக் கக்கிக் கொண்டிருந்தது. அந்த விதானத்தின் கீழே நான் தலையில் மூட்டையை வைத்த வண்ணம் கிழவரைப் பின்தொடர்ந்து சித்தன்னை வீட்டுக்கு வந்து சேர்ந்தேன். சித்தன்னை என்னை அன்புடன் தழுவிக் கொண்டாள். அந்த அணைப்பிலே என்னுடைய துக்கத்தைச் சற்று மறந்தேன்.

எஸ். ஆர். ராமானுஜம்

2

என் சித்தப்பா மதுரையில் பெரிய வக்கீல். பிரசித்தி பெற்றவர். ஆயிரக்கணக்கில் வருமானமுடையவர். என் சித்தன்னை இரக்கமும் தயாளமும் நிறைந்தவள். அவள், "நான் ஒரு மகளைத்தான் பெற்றெடுத்தேன். ஆனால் இரண்டு பெண்கள் எனக்கு இருக்கிறார்கள்" என்பாள். அவர்களுடைய ஏக புதல்வியான லலிதா "அக்கா, அக்கா!" என்று என்னோடு எப்பொழுதும் ஒட்டிக் கொண்டிருப்பாள். இவர்களைத் தவிர மூர்த்தியும் அந்தக் குடும்பத்தில் ஒருவர். சித்தப்பாவின் தங்கை மகன். சித்தப்பா அவரைத் தன் வீட்டோடு வைத்துக் கொண்டு படிக்க வைத்தார். இப்போது மூர்த்தி சென்னையில் சட்டக் கல்லூரியில் வாசித்துக் கொண்டிருந்தார்.

மூர்த்தியிடமிருந்து அவ்வப்போது லலிதாவுக்குக் கடிதங்கள் வரும். அந்தக் கடிதங்களை லலிதா என்னிடம் காண்பிப்பாள். பின்னால் தம்பதிகளாகப் போகிறவர்களாகிய அவர்களது கடிதக்

களைப் பார்த்துவிட்டு, எனக்கும் ஒரு கடிதத்தை எடுத்து எதாவது கிறுக்கத் தோன்றும். ஆனால் நான் யாருக்குக் கடிதம் எழுத முடியும்?

ஒரு வருஷம் ஒரு நிமிஷத்தில் ஓடி மறைந்தது. ஓடும்போது சும்மா ஓடிப்போய் விடவில்லை. மழை காலம் வந்தவுடனே நதியில் பிரவாகம் பெருகுவதைப்போல, வஸந்த காலம் வந்தவுடனே இனிய மணத்துடன் தென்றல் காற்று வீசுவதுபோல, உரிய காலம் வந்தவுடனே என் உடம்பில் யௌவனத்தின் சோபை படர்ந்தது.

“அடி அக்கா! நீ எவ்வளவு அழகாயிருக்கிறாய்! பிரமன் உன்னை எப்படித்தான் படைத்தானோ?” என்பாள் லலிதா. இந்தக் கேள்விக்கு நான் என்ன பதில் சொல்ல முடியும்? புன்னகையின் சின்னஞ் சிறு அலை ஒன்று என் முகத்தில் பூக்கும். அவ்வளவுதான்!

“ரதியைப் போலிருக்கிறாய். உன் முகத்தில் சௌந்தர்ய தேவதை நர்த்தனமாடுகிறாள். ஆனால்—? என் செல்வமே, உன் வாழ்க்கை இப்படியா முடியவேண்டும்?” என்பாள் சிற்றன்னை. என்றைக்குமில்லாமல் என் மனத்திலே புதுப்புது விதமான எண்ணங்களும் உணர்ச்சிகளும் தோன்றுவதைக் கண்டு நான் வெட்கமும் அவமானமும் அடைவேன்.

3

மூர்த்தி சென்னையில் படிப்பை முடித்துக்கொண்டு வீடு வந்து சேர்ந்தார். ஆனால், நான் முன்பின் பார்த்திராத இந்த மூர்த்தியைக் கண்டதும், என் ஹிருதயத்தின் ஒரு மூலையில் அவருடைய நிழல் விழுந்தது. இந்த நிழலின் ரூபத்தைக் கண்டு நானே நாணமுற்றேன்.

என்றைக்கு மில்லாத அதிசயமாய் என் நடத்தையிலே ஒரு மாறுதல் ஏற்பட்டது. “இவ்வளவும் ஏன்?” என்று மட்டும் என்னைக் கேட்காதீர்கள். அதுதான் எனக்குங் கொஞ்சம் கூடப் புரியவில்லை.

அன்றிரவு நான் ஆகாயத்தைப் பார்த்தேன். என்றைக்கும் போலில்லாமல் அன்று நக்ஷத்திரங்கள் என்னைப் பார்த்துச் சிரிப்பது போலத் தோன்றின. மேகங்கள் எனக்காக வருத்தப் படுவனபோல் கண்ணீர் சிந்தின. என் நெற்றியில் வீழ்ந்த மழைத் துளியை நான் கையால் அகற்றியபோது, என் நெஞ்சின் ஆழத்திலிருந்து ஒரு பெருமூச்சு வேதனையுடன் கிளம்பி வந்தது.

நாளாக நாளாக, அந்த வேதனை எப்படிப் பட்டது என்பதை நான் அறிந்து கொண்டேன்.

இன்று உங்களிடம் சொல்வதற்குத் தைரியம் வந்ததே, இந்தத் தைரியத்தில் நூற்றில் ஒரு பங்கு எனக்கு அந்த நாளில் இருந்திருந்தால் — ஸமூகத்தின் கட்டுக்களைக் களைத் தெறிந்து விட்டு உலகத்தை அடிமையாகக் கொண்டிருப்பேன். ஆனால் அந்தப் பாக்கியந் தான் எனக்கு இல்லையே!

• • •

ஒருநாள் மாலை லலிதாவின் அறைக்குச் சென்றேன். உள்ளே யாரோ பேசும் சத்தம் கேட்டது. “இன்றைக்கு உன்னைப் போட்டோ எடுக்கிறேன்; நிச்சயமாகத் தான்!” என்றார் மூர்த்தி லலிதாவிடம்.

“தினமும் அப்படித்தான் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்!” என்றாள் லலிதா.

“உன் அக்காவும், நீயும் சேர்ந்து உட்காருங்கள். இருவரையும் படம் பிடித்து விடுகிறேனே!” என்றார் மூர்த்தி.

“அக்கா சம்மதிக்க மாட்டாளே?”

“நான் சொன்னால் கேட்பாளா?” என்றார் மூர்த்தி. நான் மெய்ம்மறந்து இந்தச் சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டிருந்தேன். லலிதா வெளியே வந்ததை நான் கவனிக்கவில்லை. அவள் என் கையைப் பிடித்து அறைக்குள் இழுத்துக் கொண்டு போனாள். ஜடம்போல் நான் பின் தொடர்ந்தேன்.

“வக்கீல் ஸார்! போட்டோ எடுங்கள் ஸார்!” என்றாள் லலிதா.

“பரிகாசம் செய்தால் எனக்குக் கெட்ட கோபம் வரும், லலிதா!” என்று சற்று இரைந்தே கூறினேன். “நீ அழகாய்த் தானே யிருக்கிறாய், லக்ஷ்மி? உன் போட்



டோவை உன் கண்களால் பார்த்தபிறகுதான் நான் பொய் சொல்ல மாட்டேன் என்பது உன் மனத்தில் படும்" என்றான்.

எப்படியோ என்னை அவர் படம் பிடித்துக் கொண்டார்.

4

ஆவணி மாதம். அந்தி வேளை. கார் காலத்து மேகங்கள் ஆகாயத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்தன. ஜன்னலின் வழியே வெளியே பார்த்துக் கொண்டிருந்தேன். என் மனத்தில் விதம் விதமான சிந்தனை அலைகள் எழும்பிக் கொண்டிருந்தன. வாழ்க்கையிலே ஒரு சொல்லொணு வேதனையை அனுபவிப்பவள் போல் என் மனம் கூக்குரலிட்டுக் கொண்டிருந்தது.

சிற்றன்னை என்னிடம் அன்புடன் இருக்கிறாள். சிற்றப்பா மிக்க ஆதரவுடன் நடந்துகிறார். லலிதா தன் உயிரைப்போல் என்னை நேசிக்கிறாள். ஆனால் இந்த அன்பில் ஏன் எனக்கு ஒருவித சூனியம் தென்படுகிறது? ஆழ்ந்த சோகத்தால் வாடும் என் ஹிருதயத்தைத் தட்டி எழுப்பக்கூடிய ஆழ்ந்த அன்பை நான் யாரிடம் பெற முடியும்?

திடீரென்று மூர்த்தியின் உருவம் என் கண்ணெதிரில் நின்றது.

அதே சமயம் என் கண்களை யாரோ கைகளால் பொத்தினார்கள். வளையல்களின் சத்தத்தால் யார் என்பதை உணர்ந்து கொண்டேன்.

"ஏன் அக்கா அழுதிருக்கிறாய்?" என்றாள் லலிதா. சட்டென்று கண்களைத் துடைத்துக் கொண்டேன்.

"நானா அழுதிருக்கிறேன்?" என்றேன்.

அவள் என் தோள்களைப் பிடித்துக் குலுக்கியபடியே, "உண்மையாகச் சொல்லுகிறேன். அக்கா, உன் மனது சரியாயில்லை. நாளுக்கு நாள் ஏன் இப்படி வெளிறிப் போகிறாய்?" என்றாள்.

நான் விழித்துக் கொண்டேன். புன்சிரிப்புடன், "யாரிடமாவது அன்பு அதிகமாகி விட்டால் அப்படித்தான் சொல்லத் தோன்றும்" என்றேன்.

"இல்லை, அக்கா! நீ எவ்வளவோ வாடிவிட்டாய். நான் ஊரிலிருந்து திரும்பி வருவதற்குள் கட்டாயம் பெருத்துவிட வேண்டும், தெரிகிறதா?"

"எந்த ஊருக்குப் போகிறாய்?" என்று ஆவலுடன் கேட்டேன்.

"நாளைக்கு நானும் அம்மாவும் திருச்செந்தூர் செல்கிறோம், அக்கா! ஒரு மாதம் பிடிக்கும் திரும்பி வர!"

"அப்பா வரவில்லையா?"

"அப்பாவும், மூர்த்தியும் ஒரு பெரிய கேஸ் விஷயத்தில் ஆழ்ந்திருக்கிறார்கள். அவர்கள் வருவதற்குச் சாத்தியப்படாதாம்!"

"சரி, அக்காவை மறந்து விடாதே!" என்று சொல்லி அனுப்பினேன்.

5

தாயும் மகளும் ஊருக்குப் போய் இரண்டு நாட்களாகி விட்டன. நடக்கின்ற குழந்தைக்கு எல்லாப் பொருள்களையும் எடுத்து எடுத்து எறிய வேண்டுமென்ற ஆவல் தோன்றுவதுபோல என் மனத்திலும் ஒரு புது விதமான ஆவல் தோன்றிற்று.

மூர்த்தியோடு இரண்டு வார்த்தைகள் பேச வேண்டும் என்று வாய் துடிதுடிக்கும்; குறித்த நேரத்தில் மூர்த்தி கோர்ட்டிலிருந்து வீட்டிற்கு வரா விட்டால் மனம் காரணம் தெரியாமல் பரபரப்படையும்.

என்னைக் கண்டதும் மூர்த்தியின் நடை மட்டுப்படும். என் கண்களும் அவர் கண்களும் சந்திக்கும்போழுது நான் என்றுமில்லாத ஒரு ஆனந்தத்தை யடைவேன்.

அன்று பௌர்ணமி. நிலா பால்போலக் காய்ந்து கொண்டிருந்தது. வீட்டில் யாவரும் படுத்து உறங்கி விட்டனர். மூர்த்தியின் அறையில் மட்டும் விளக்கு எரிந்து கொண்டிருந்ததைப் பார்த்தேன்.

இரவில் இந்நேரத்தில் அவர் என்ன செய்து கொண்டிருக்



கிறார் என்பதைப் பார்க்க ஆவல் எழுந்தது. மெல்லப் போய் ஜன்னல் வழியாய் எட்டிப் பார்த்தேன். "நாவல் படிக்கலாம், அல்லது சட்டப் புஸ்தகங்களைப் பார்த்துக் கொண்டிருக்கலாம்" என்று நான் நினைத்தேன். ஆனால் அவர் மேஜையின் மேல் கையை ஊன்றிக் கொண்டு ஆழ்ந்த யோசனையில் இருந்தார். அவர் கையில் என் படம் இருந்தது. உணர்ச்சியின் ஆவேசம் என் உடம்பில் பொங்கி எழுந்தது.

துக்கத்தினால் கொஞ்சம் குமுறப் படுக்கையில் போய் விழுந்தேன். தலை 'கிர்'ரென்று சுழன்றது. ஒரே மயக்கமாயிருந்தது. அந்த மயக்கத்தினூடே ஒரு இன்பக் கனவு கண்டேன்.

6

அவரும் நானும் முதல் முதல் சந்தித்து ஒரு வருஷம் ஆகியிருந்தது. இந்த ஒரு வருஷத்திலும் இரவின் இந்நேரத்தில் என் அறைப் பக்கம் அவர் காலடி கூட எடுத்து வைத்தது கிடையாது. ஆனால் இன்றைக்கு—?

"லக்ஷ்மி!" என்றார்.

என் அங்கங்க ளெல்லாம் ஒரு நிமிஷம் ஜில்லென்றன. நான் பேசாமலிருந்தேன்.

"என்னை மன்னித்துவிடு, லக்ஷ்மி!" என்றார் மீண்டும்.

"எந்தக் குற்றத்திற்காக?"

"இந்த ஒரு வருஷமாக அல்லும் பகலும் உன் சிந்தனையைத் தவிர வேறு எண்ணம் கிடையாது. அதற்காகத்தான்!"

என் கண்களிலிருந்து நீர் பெருக்கெடுத்தது.

"என் மனத்துடன் ஒவ்வொரு நிமிஷமும் போராடிக் கொண்டிருக்கிறேன். லக்ஷ்மி! உனக்கு இடப்பட்டிருக்கும் இந்தக் கோர தண்டனையைக் கண்டு மனம் வெதும்புகிறேன்."

"அது என் தலை விதி."

"நெஞ்சில் கை வைத்துச் சொல். எந்தக் குற்றத்திற்காக நீ இப்படி அவமானப் பட வேண்டும்?"—எந்தக் கேள்வி இத்தனை நாளும் என் மனத்தை இடைவிடாமல் உறுத்திக் கொண்டிருந்ததோ, அதே கேள்வியைத்தான் அவரும் கேட்டார்.

"எனக்கு என்ன தெரியும்?"

"குற்றமில்லாமல் என் கைகளில் விலங்கை மாட்டிக் கொண்டிருக்கிறாய்?" என்று கூறி என் கையை அவர் தம் கையால் பற்றிக் கொண்டார். கையை விடுவிப்பதற்கு நான் பிரயத்தனப் படவில்லை.

அன்றிரவு பூராவும் நான் கண் துயிலவில்லை. "சிவ தனுசை ராமன் இரண்டு துண்டாக ஒடித்து விட்டான்!" என்ற செய்தியைக் கேட்ட போது சீதை எவ்வாறு ஆனந்தம் அடைந்திருப்பாளோ, அவ்வித ஆனந்தத்தை நான் அனுபவித்துக் கொண்டிருந்தேன்.

அதி காலையில் லேசாகக் கண்களை மூடினேன். லலிதா என் முன் வந்து, "இருந்திருந்து எனக்குத்தானா நீ வஞ்சகம் செய்ய நினைத்தாய், அக்கா?" என்று அழுவது போலிருந்ததைக் கண்டு கண்களைத் திறந்து கொண்டேன்.

மறுநாள் சித்தப்பாவுக்குக் காப்பி எடுத்துக் கொண்டு அவர் அறைக்குப் போனேன். சித்தப்பா இரைந்து பேசியது என் காதில் விழுந்தது. "உன்னைச் சாதுவான பிள்ளை என்று நினைத்திருந்தேன். இன்று இந்த மதுரை நகர் முழுதும் தேடினாலும் உன்னைப் போன்ற அயோக்கியனைக் கண்டு பிடிக்க முடியாது. அப்படிப்பட்ட அயோக்கியனை யாராவது வீட்டில் வைத்திருப்பார்களா?"

என் கையிலிருந்த காப்பி கீழே கொட்ட ஆரம்பித்தது. "என்னை மன்னித்து விடுங்கள், மாமா! ஒரு திக்கற்ற பெண்ணை ஆதரிப்பதாக உறுதி கூறிவிட்டேன்!" என்றார் அவர்.

என் உடம்பு அவமானத்தினால் குன்றிப் போய் விட்டது.

"யார் அவள்?" என்று கேட்டார் சித்தப்பா.

என் அறையை நோக்கி நான் ஓட ஆரம்பித்தேன். "நீங்களே பின்னால் அவளைத் தெரிந்து கொண்டு என்மேல் இரக்கம் கொள்வீர்கள்" என்று மூர்த்தி சொன்னது என் காதில் விழுந்தது.

படுக்கையில் படுத்துக்கொண்டு நான் விம்மி விம்மி அழுதேன். என்னால் எவ்வளவு தூரம் அனர்த்தம் விளையப் போகிறது என்பதை நினைத்துப் பார்த்தபோது என் மனம் சொல்ல முடியாத வேதனை அடைந்தது. இந்த விபத்திலிருந்து விடுதலை அடைய மறு நாளே அநாதை ஆஸ்ரமத்தில் அடைக்கலம் புகுவது என்று தீர்மானித்தேன். இந்த விருப்பத்தை என் சித்தப்பாவிடம் தெரிவித்தேன். அவர், "அநாதை ஆஸ்ரமத்திலிருக்க உனக்குப் பிரியமானால் அங்கே

போயிரு, அம்மா! உனக்கு என்றைக்கு இந்த வீட்டிற்கு வர இஷ்டமோ அப்பொழுது வந்து சேரலாம். உனக்காக இந்த வீட்டுக் கதவுகள் எப்பொழுதும் திறந்திருக்கும்'' என்றார்.

அவருடைய கால்களில் விழுந்து வணங்கினேன். சாமான்களை எடுத்து வண்டியில் வைத்தேன்.

"இதென்ன லக்ஷ்மி?'' என்றார் மூர்த்தி.

"என் இஷ்டம். அதைக் கேட்பதற்கு நீங்கள் யார்?'' என்றேன்.

அவர் வாயடைத்து நின்றார்.

* * *

காலச் சக்கரம் சுழன்றது. மூன்று வருஷங்கள் ஓடி மறைந்தன. என்னை யாரோ பார்க்க வந்திருப்பதாக ஆசிரமத் தலைவி சொன்னார். மூர்த்தியும் லலிதாவும் நின்று கொண்டிருந்தார்கள். லலிதாவின் கையில் ஒரு குழந்தை இருந்தது.

"நீதானா எங்கள் லக்ஷ்மி? அடையாளமே தெரியவில்லையே?'' என்றாள் லலிதா.

நான் சிரித்துக் கொண்டே, "குழந்தைக்கு என்ன பெயர் லலிதா?'' என்றேன்.

"எங்கள் வீட்டில் எப்பொழுதும் 'லக்ஷ்மி' வாசம் செய்து கொண்டிருக்க வேண்டுமல்லவா? அதற்காகத்தான் உன் பெயரையே அவளுக்கு வைத்திருக்கிறேன்'' என்றார் மூர்த்தி புன்னகையுடன்.

அதே சமயம் ஆசிரமத்தின் மறு கோடியிலிருந்து குழந்தைகளின் பாட்டுச் சத்தம் தென்றல் காற்றினூடே மிதந்து வந்து காதுகளில் இன்பமாக ஒலித்தது.



வேலைக்காரி :—அம்மா! நாளைக்கு இரவு 8-மணியிலிருந்து 9-20 வரை நான் ரேடியோவில் பாடப்போகிறேன். அதைக் கேட்டு உங்கள் அபிப்பிராயத்தைச் சொல்லுங்க!

பாரா உஷார்!

ஸோமாஸ்

நான் ஆபீஸிலிருந்து வீட்டுக்கு வந்ததும் என் அறையில் அமர்ந்து எதிரிலிருந்த சர்மாவின் வீட்டிலிருந்து வரும் கர்ணாமிர்தமான கானை இன்பத்தில் லயித்திருப்பேன். காற்றில் மிதந்து வரும் அந்த கானத்தைப்போலவே அந்தப் பெண்ணும் மெல்லிய பூங்கொடி போலிருந்தாள். முதலிலெல்லாம் அந்தப் பெண்ணைப் பார்ப்பதும் சுலபமாகத்தான் இருந்தது. வரவர அந்தப் பெண் என் கண்ணில் படுவதேயில்லை. அதற்குப் பதிலாக அப் பெண்ணின் தகப்பனார் ஜகதீச சர்மாவின் முகம் அடிக்கடி தென்பட ஆரம்பித்தது. சர்மாவின் தீக்ஷண்யப் பார்வை எனக்கு அவரிடம் ஒரு பயத்தைக் கொடுத்தது!

ஓயாமல் எப்போது பார்த்தாலும் எனக்காகவே வாசலில் 'பாரா' கொடுக்கும் சர்மாவினிடம் எனக்கு வர வரப் பயம் அதிகமாகி விட்டது. மாலை வேளையில் சங்கீதம் கேட்பதை அடியோடு நிறுத்தி விட்டேன். ஒவ்வொரு சமயம் சர்மாவின் பெண் ஜன்னல் வழியாகப் பார்ப்பாள். அதே சமயம் சர்மாவின் கொடூரப் பார்வையும் என் மேல் விழும். இதற்காகவே நான் என் அறையில் தங்குவதைக் குறைத்துக் கொண்டேன். ஞாயிற்றுக்கிழமை வந்து விட்டால் சர்மா வாசலை விட்டு உள்ளே போக மாட்டார். அவர் 'பாரா' கொடுக்கும் வேலைக்கு ஞாயிற்றுக்கிழமை கூட லீவு கிடையாது!

என்னத்துக்காக அவர் இப்படிப் 'பாரா' கொடுத்துப் பிராணனை வாங்குகிறார் என்று எனக்கு வெகு நாட்கள் வரையில் புரியவில்லை.

கொஞ்சம் கொஞ்சமாக ஜகதீச சர்மா என் அறைக்கு வந்து போக ஆரம்பித்தார். நான் கொஞ்சம் உஷாராகவே இருந்து வந்தேன்.

ஒரு நாள் ஜகதீச சர்மா என்னைப் பத்து ரூபாய் கடன் கேட்டார். இப்பொழுது தான் அந்த ஆசாமியின் சூழ்ச்சி தெரிந்தது. கடன் கொடுக்கும்படியான நிலையில் நான் இருக்கிறேனா என்பதைத் தெரிந்து கொள்ளத்தான் இப்படி ஓயாமல் ஒழியாமல் எனக்குப் 'பாரா' போட்டிருக்கிறார்!

"அடுத்த மாதம் ஆறாம் தேதி கொடுத்து விடுகிறேன். பத்து ரூபாய் கொடுங்கள். ரொம்ப அவசரம்!" என்று சர்மா என்னைக் கெஞ்சும் தோரணையில் கேட்டார். நான் முன் பின் யோசியாமல், என் செலவுக்கு என்று வைத்திருந்த பத்து ரூபாயையும் அவரிடம் கொடுத்துவிட்டேன். காரணம், கடனைத் திருப்பித் தரவேண்டுமே என்பதற்காகவாவது சர்மா என் வீட்டுப் பக்கம் வராமலிருப்பார் என்று நான் எண்ணியது தான். என்ன ஆச்சரியம்! குறித்த தேதியில் சர்மா, 'டாண்' என்று பணமும் கையுமாக வந்து விட்டார்.

பிறகு அடிக்கடி சர்மாவுக்குப் பணத் தட்டு ஏற்பட்டுக் கொண்டேயிருந்தது. ஓயாமல் என்னைக் கடனுக்கு நச்சரிக்கத் தொடங்கினார். நானும் கடன் கொடுத்துக் கொண்டே வந்தேன்.

ஒரு நாள் வழக்கம்போல் சர்மா என்னிடம் கடன் கேட்க வந்தார். என்னிடம் அப்பொழுது பணம் இல்லை; ஆனால் வேண்டிய அளவுக்குக் கோபம் இருந்தது.

"நானும் ஒரு குடும்பிதான், ஸார்! என்னை ஏன் இப்படி அடிக்கடி நச்சரிக்கிறீர்கள்?" என்று கேட்டு விட்டேன்.

"அப்படியானால் உங்கள் குடும்பம் எங்கே?" என்று கேட்டார் சர்மா.

"குடும்பத்தைச் சேர்ந்தவர்களெல்லாம் எங்கேயாவது ஊரில் இருக்கக் கூடாதா? உமக்கு எதிரில்தான் இருக்க வேண்டுமா?"

"கோபித்துக் கொள்ளக் கூடாது. உங்கள் தாயார், தகப்பனார் எல்லாம் எங்கேயிருக்கிறார்கள்?"

"திருச்சிராப்பள்ளி, ஆண்டார் தெருவில்!"

"உங்கள் தகப்பனார் பெயர்?"

"கல்யாணசுந்தரமையர்!"

"யாரு, மண்டகளத்தூர் ராவ்சாஹிப் கல்யாண சுந்தரமையரா?"

"ஆமாம், கால வித்தியாசத்தினால் எங்கள் குடும்பம் தற்சமயம் அவ்வளவு நல்ல நிலையில் இல்லை. ஆகையினால் நான் யாரிடமும் என் குடும்பத்தைப் பற்றியே பேசவில்லை."

"இந்த மாதிரி ஒவ்வொரு குடும்பத்திலும் ஏதாவது ஏற்படுவது சகஜம். அதற்காக

வருத்துவது சரியல்ல. சரி; நான் உங்களுக்கு ரொம்பத் தொந்தரவு கொடுத்து விட்டேன். மன்னிக்கணும். நான் வருகிறேன்!”

அவர் போனபிறகு அவரது அங்கவஸ்திரம் நாற்காலியில் அநாதையாய்க் கிடப்பதைப் பார்த்தேன். அதை அவரிடம் கொடுத்து விடலாம் என்று அவர் வீட்டுக்குச் சென்றேன். அவரும் அவர் மனைவியும் பின்வருமாறு பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டதும் என் கால்கள் உள்ளே செல்ல மறுத்து விட்டன.

சர்மாவின் மனைவி :—காயா, பழமா ?

சர்மா :—பழந்தான். இன்று அவன் பணம் தரவில்லை. சண்டைக்கு வந்து விட்டான். நானும் விடவில்லை. அவனைத் தொந்தரவு செய்து அவன் தாயார் தகப்பனாரைப் பற்றி விசாரித்து விட்டேன். கடைசியில் பையன் யார் தெரியுமோ? நம்ம மண்டகளத்தூர் ராய்சாஹிப் கல்யாணசுந்தரமையர் பிள்ளை !

சர்மாவின் மனைவி :—அவர் ஜாடையிருக்கிறதே என்று அப்பொழுதே யோசித்தேன்! சரிதான்; நம்ம பிரேமாவின் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்!

இதற்குமேல் அவர்கள் பேச்சைக் கேட்க எனக்கு நேரம் இல்லை. அதே யோசனையில் ஆபீஸுக்குப் போய்விட்டேன்.

இந்தச் சம்பவம் நிகழ்ந்த ஒரு வாரத்துக்கெல்லாம் என் தகப்பனாரிடமிருந்து பின்வருமாறு எனக்கு ஒரு கடிதம் வந்தது.

“சர்மாவின் கடிதம் பார்த்தேன். அவர் எனது பள்ளித் தோழர். இவ்வளவு நாட்களாக அவர் இருப்பிடம் தெரியாததனால் கடிதப் போக்கு வரத்து இல்லாமற் போய் விட்டது. அவர் பெண் பிரேமாவின் ஜாதகம் உனக்குப் பொருத்தமாயிருக்கிறது. நான் நாளை தினம் புறப்பட்டு அங்கே வருகிறேன். மற்ற விவரம் நேரில்.”

சர்மா எனக்குப் ‘பாரா’ கொடுப்பதற்குப் பதிலாக, அவருடைய பெண் பிரேமா இப்பொழுது எனக்குப் ‘பாரா’ கொடுத்துக் கொண்டிருக்கிறாள்!

புதிய இசைத் தட்டுகள்

சுவாமி சுத்தானந்த பாரதியாரின் புதிய தமிழ்க் கீர்த்தனங்களில் மிகவும் பிரபலமாகி யிருப்பது சங்கராபரண ராகத்தில் அமைந்திருக்கும் “தூக்கிய திருவடி துணை” என்ற கீர்த்தனம். ஜி. இ. 6212 இசைத் தட்டில் ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாள் மேற்படி கீர்த்தனத்தைப் பாடியிருக்கிறார். முதலில், சங்கராபரண ராகத்தை ஒரு சுழற்றுச் சுழற்றி விட்டிருக்கிறார். தெளிவும், கனிப்பும், மெருகும் கொண்ட குரல். ஆலாபனத்தில் அதிகக் கற்பனை வேலைப்பாடுகளுக்கு இடம் இல்லாவிடினும், கண்டிருக்கும் சஞ்சாரங்கள் எல்லாம் ஸ்படிகம்போல் தெளிவாயும், அழுத்தமாயும் இருக்கின்றன. உருப்படியிலுள்ள சங்கதிகளும் அப்படியே. ‘எத்தனையோ பிறவி எடுத்தெடுத்தே யிளைத்தேன். இரு வினைப் பயன்களை எய்தி எய்திக் களைத்தேன்’ என்னும் இடத்தில் நிரவல் சொகுசாயிருக்கிறது. வேறு எந்தக் காரியங்களில் இளைப்பும் களைப்பும் உண்டானாலும், இந்த இசைத் தட்டைக் கேட்பதில் இளைப்பாவது களைப்பாவது ஏற்பட நியாயமில்லை.

ஜி. இ. 6161 இசைத் தட்டில் ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாள் ஒரு புறம் பூர்வி கல்யாணியில் ‘இந்தப் பராமுகம்’ என்னும் உருப்படியும் மறுபுறம் நாதநாமக்கிரியையில் ‘நினைப்ப தெப்போது நெஞ்சே’ என்ற உருப்படியும் பாடியிருக்கிறார். ராகபாவத்தையும் தாளநுக்கத்தையும் கவனிக்கும் போது பூர்வி கல்யாணி உருப்படி மிகச் சிறந்ததாகத் தென்படுகிறது. ‘நீ ஒரு கிளியோ என் குறை கேட்டிலையோ’ என்ற இடத்தில் நிரவல் ராகபாவப் பொலிவுடன் உருக்கமாயிருக்கிறது. நாதநாமக்கிரியையில் ‘நினைப்ப தெப்போது நெஞ்சே?’ என்னும் ஸ்ரீ வேதநாயகம் பிள்ளையின் உருப்படியைச் சாகித்தியத் தெளிவுடன் கச்சிதமாய்ப் பாடியிருக்கிறார். சங்கீதக் கலையுடன் ஹாஸ்யத்தையும் சேர்த்து அநுபவிக்க விரும்புகிறவர்களுக்கு, இந்த உருப்படியில், ‘தொண்டை கிழித்துக் கொண்டு சண்டையிடும் வக்கீல்கள் அண்டையிலிருந்து நம் மண்டையை உடைத்தால்’ என்னும் இடம் வெகு ரஸமாயிருக்கும்.

ஜி. இ. 6196 இசைத் தட்டில் கேட்கும் லயச் சித்திரம், கச்சேரிகளில், பக்க வாத்தியங்களுக்குத் தனி ஆவர்த்தனம் கொடுப்பது போல் பல தாள வாத்தியங்களாலான தனிக் கச்சேரி. சென்னை ரேடியோ நிலையத்தைச் சேர்ந்த வி. கோவிந்தசாமி நாயக்கர், டீ. கண்ணன், எஸ். வி. எஸ். நாராயணன், வில்வாத்திரி அய்யர், எஸ். பாலச்சந்திரன் ஆகியவர்கள் இதில் தங்கள் கைவரிசையைக் காட்டியிருக்கிறார்கள். மிருதங்கம், தபலா, கடம், கஞ்சிரா, டோலக் இவை கேட்கின்றன. ஆரம்பத்திலும் கடைசியிலும் தாளத்தைக் குறிப்பிடுவதற்கான ஒரு அடி பாடப்பட்டிருக்கிறது. தாள வாத்தியக்காரர்கள் கோஷ்டியாகச் சேர்ந்து விட்டால் அவர்கள் முதலில் மாற்றி மாற்றித் தனித் தனியாக வாசிப்பதும் பிறகு கடைசியில் எல்லோரும் சேர்ந்து ஜிஞ்ஜாமிர்தமாக ஜமாய்ப்பதுமான விமரிசையைப் பற்றிச் சொல்ல வேண்டுமா? லய வின்யாசங்களில் பிரிய முள்ளவர்களுக்கு இது ஏக உற்சாகத்தை உண்டாக்கும். மற்றவர்களுக்குத் தலைவலிதான்.

மேற்படி கொலம்பியா இசைத் தட்டுகள் சென்னை, மவுண்ட் ரோட், ஸரஸ்வதி ஸ்டோர்ஸினால் வெளியிடப்பட்டவை.

—‘இசைத்தேனீ’



பொம்மைக் கல்யாணம்

வி.ஜி.

பாலுவும் நீலுவும் ஒருவரை விட்டு ஒருவர் பிரியவே மாட்டார்கள். அவ்வளவு சிநேகம். எங்கே சென்றாலும், என்ன விளையாடினாலும் இருவரும் சேர்ந்தே செல்வார்கள்; சேர்ந்தே விளையாடுவார்கள்.

பாலுவிடம் ஒரு அழகான பெண் பொம்மை இருந்தது. அதே மாதிரி நீலுவிடம் ஒரு அழகான ஆண் பொம்மை இருந்தது. இந்த இரண்டு பொம்மைகளுக்கும் கல்யாணம் செய்து கண்ணுக்கு அழகாகப் பார்ப்பது என்று இருவரும் ஒரு நாள் தீர்மானித்தார்கள்.

"வரதட்சணை என்ன?" என்று கேட்டாள் நீலு.

"இரண்டு 'சாக்லட்'!" என்றான் பாலு.

"சும்மாக் கேட்டேன்! 'வரதட்சணை வாங்குவது ரொம்ப அநியாயம்!' என்கிறார் என் அப்பா. அதனால் நானும் உன்னிடம் வரதட்சணை வாங்க மாட்டேன்!"

"ஆமாம், பெண்ணைப் பெற்றவரோ, இல்லையோ! அப்படித்தான் சொல்வார். என் அப்பா அப்படிச் சொல்வதில்லை; அவர், 'வரதட்சணை வாங்குவது ரொம்ப ரொம்ப நியாயம்!' என்கிறார்! அதனால் இந்த இரண்டு 'சாக்லட்'டுகளையும் வைத்துக் கொள். முகூர்த்தம் நாளைக்கு வைத்துக் கொள்ளலாம்!" என்றான் பாலு.

நீலுவும் சிரித்துக் கொண்டே அந்தச் 'சாக்லட்'டுகளை வாங்கி வாயில் போட்டுக் கொண்டாள்.

மறு நாள் கல்யாண ஏற்பாடுகளெல்லாம் பிரமாதமாக நடந்தன. கூடத்தில் நான்கு குத்து விளக்குகளை ஏற்றிச் சதுரமாக வைத்தாள் நீலு. அவற்றைச் சுற்றி மல்லிகை மலர் மாலையைக் கட்டினாள் நீலுவின் தோழியான சாரு. 'கிராமபோ'னுக்குச் சாவி கொடுத்து, நாதஸ்வரக் கச்சேரி 'பிளேட்'டை எடுத்து வைத்தான் பாலு. பல குழந்தைகள் இந்தப் பொம்மைக் கல்யாணத்தில் பங்கெடுத்துக் கொண்டன. மொத்தத்தில் கல்யாணம் ரொம்ப அமர்க்களமாக நடந்தது.

"'ரேஷன்' காலமோ இல்லையோ, அதனால் விருந்து வைக்க முடியவில்லை!" என்று சொல்லிக் கொண்டே பாலு எல்லோருக்கும் கற்கண்டு வழங்கினான்.



கல்யாணமானதும், "பாலு, பாலு! உன் பொம்மை என்னுடைய நாட்டுப் பெண்ணாகி விட்டாள்! இனிமேல் அவள் எனக்குத்தான் சொந்தம்!" என்று சொல்லிக் கொண்டே தன் பொம்மையுடன் பாலுவின் பொம்மை

யையும் சேர்த்து எடுத்துக் கொண்டு ஓட ஆரம்பித்து விட்டாள் நீலு.



பாலு அழ ஆரம்பித்து விட்டான்! ஏனெனில், நீலு இப்படிச் செய்வாள் என்று அவன் எதிர்பார்க்கவே யில்லை. என்னமோ விளையாட்டுக்காகக் கல்யாணம் பண்ணிவிட்டு, அப்புறம் அவரவர்கள் பொம்மையை அவரவர்கள் எடுத்துக் கொள்ளலாம் என்று அவன் நினைத்துக் கொண்டிருந்தான்! கடைசியில், இப்படியா செய்வாள் நீலு?

"உன்னுடைய பெண் இனி மேல் என்னுடைய வீட்டில் வாழவேண்டியவள் தானே? அதனால் நான் உன் பொம்மையைக் கொடுக்கவே மாட்டேன்!" என்று நீலு பிடிவாதம் பிடித்தாள்.

"ஆகட்டும், பார்க்கலாம்!" என்று ஏதோ தீர்மானத்துக்கு வந்தவனாய் பாலு முணுமுணுத்தான்.


தீபாவளி வந்தது. பாலு, நீலுவை மெள்ள நெருங்கி, "நீலு, நீலு! நாம் தலைதீபாவளி விளையாட்டு விளையாடலாமா? தையற் கடையிலிருந்து ரொம்ப அழகான துணிகளை யெல்லாம் கொண்டு வந்து வைத்திருக்கிறேன். அப்பா வேறே எனக்குக் கற்கண்டு, 'சாக்லெட்' எல்லாம் வாங்கி வந்து கொடுத்திருக்கிறார். நீ மாப்பிள்ளையையும் பெண்ணையும் தலை தீபாவளிக்காக என் வீட்டுக்கு அனுப்பி வைக்கிறாயாம்; நான் இரண்டு பொம்மைகளுக்கும் எண்ணெய் ஸ்நானம் செய்துவைத்து, புதுப் புதுத் துணியெல்லாம் கட்டி, உனக்கும் கற்கண்டு, 'சாக்லெட்' எல்லாம் கொடுக்கிறேனாம்; சீர்வரிசைகளெல்லாம் நான் என்னதான் பிரமாதமாகச் செய்தாலும், நீ எடுத்ததற்கெல்லாம் கோபித்துக் கொண்டு, "இதோ, என் பிள்ளையைக் கூட்டிக்கொண்டு போய்விடுகிறேன்!" என்று என்னைப் பயமுறுத்துகிறாயாம்; நான் உன் காலில் விழுந்து, கன்னத்தில் போட்டுக் கொண்டு, "அப்படி யெல்லாம் செய்து விடாதே!" என்று உன்னை ரொம்பவும் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேனாம்; தீபாவளிக்கு மறுநாளே நீ மாப்பிள்ளையுடன் பெண்ணையும் அழைத்துக் கொண்டு உன் வீட்டுக்குப் போய் விடுகிறாயாம். என்ன, விளையாடலாமா?" என்று கேட்டான் பாலு.

"தீபாவளிக்கு மறுநாள் பெண்ணையும் பிள்ளையையும் என்னுடன் அனுப்பி வைக்கும்போது, நீ கல்யாணத்தின்போது அழுதது மாதிரி அழக் கூடாது. என்ன, தெரியுமா?" என்று கேட்டாள் நீலு.

"அழத்தான் அழுவேன்!" என்று சொல்வாளா என்ன பாலு? "ஊஹூம். அன்று நான் விளையாட்டுக்காக அழுததை நீ நிஜமென்றே நினைத்துக் கொண்டாயா?" என்று ஒரு போடு போட்டான் பாலு.


இரண்டு பொம்மைகளும் நீலுவின் கையிலிருந்து, பாலுவின் கைக்கு மாறின. மாறினதுதான் தாமதம்! நீலுவின் பொம்மையை வீசி எறிந்து விட்டு, தன் பொம்மையை மட்டும் எடுத்துக் கொண்டு ஓட்டம் பிடித்து விட்டான் பாலு!

"நல்ல வேளை! நம்மைப் போல் செய்யாமல் அவனுடைய பொம்மையை மட்டும் எடுத்துக் கொண்டு ஓடினானே!" என்று மிகவும் சந்தோஷமடைந்தாள் நீலு.



"மூன்று பேருக்கா இரண்டு டிக்கெட்? எங்கே, இன்னொரு டிக்கெட்?"

"உமக்குக் கண்ணு தெரியவில்லை? பொம்மையன்னு வாங்கிக்கொண்டு போகிறோம்!"



ரொம்ப சரி !

சுப்பையர் :—வக்காளத்தில் ஒரு தபால் பெட்டியைத் திறந்தபோது நூற்றுக் கணக்கான தேனீக்கள் அதிலிருந்து வெளிப்பட்டனவாம்.

நண்பர் :— யாராவது காதலர்கள் தேனொழுகும் மொழிகளால் தங்கள் காதல் கடிதங்களை எழுதி அதில் போட்டிருப்பார்கள் ! —எம். எஸ். ராமமூர்த்தி.

★

புத்திமதி

வேலைக்காரன் :— என் ஐயா, ஒரு வேலையை நீங்கள் சொல்றபடி செய்வதா, அல்லது அம்மா சொல்றபடி செய்கிறதா ?

எஜமான் :—நான் சொல்வதும அம்மா சொல்வதும் ஒரேமாதிரி இருந்தால் நான் சொல்கிறபடி செய்; வித்தியாசமாக இருந்தால் அம்மா சொல்கிறபடி கேள் !

கே. எஸ். ராஜகோபாலன்.

★

வித்தியாசமில்லை !

டாக்டர் :—எனக்குச் சின்ன வயதில் பட்டாளத்தில் சேர்ந்து, யுத்தத்தில் நூற்றுக் கணக்கானவர்களைக் கொன்று வீழ்த்தவேண்டும் என்ற ஆசை இருந்தது......



ராமு :—அதனாலென்ன ?......ஒரே யடியாகக் கொல்வதற்குப் பதிலாக இப்போது சில்லறை, சில்லறையாகச் செய்து வருகிறீர்கள் !...அவ்வளவு தானே !... —என். என்.

சிக்கன முறை !

எஜமானன் (வேலைக்கு வந்திருக்கும் ஆளைப் பார்த்து):— என்னிடம் வேலை செய்பவர்கள் மிகவும் சிக்கனமா யிருக்க வேண்டும்.

வேலையாள்:—சிக்கனமா யிருந்ததனாலே தான் முன்னே வேலை செய்து கொண்



டிருந்த இடத்திலே என்னைத் தள்ளி விட்டார்கள்.

எஜமானன் :—அதென்ன ! ஆச்சரியமா யிருக்கிறதே !

வேலையாள் :—நான் வேஷ்டி வாங்கக் கூடப் பணம் செலவு செய்யாமல் எஜமான் வேஷ்டியையே உடுத்தி வந்தேன் !

—மு. சுவேதாரண்யம்.

★

சரியான வழி

ஒருவர் :—என்ன நாயர்வாள், மரண வரி என்று ஒன்று போடப் போறாளாமே ?

உலோபி :—பூ ! இவ்வளவுதானா ? அந்த வரி வருவதற்கு முந்தியே நாமெல்லாம் செத்துப் போய்விட்டால் தீர்ந்தது !

—எம். ஜி. பத்மநாபன்.

★

நல்ல பெயர்

கணவன் :—ஏண்டி, உன் பின்னே இருக்கும் இலட்சணத்தைப் பார்த்தால், என் பெயர் எடுக்கமாட்டான் போலிருக்கிறதே ?

மனைவி :—போகட்டும், போங்கள். அவனாவது நல்ல பெயர் எடுக்கட்டுமே !

—எஸ். மேரி செல்வம்.



அவன் திருட்டு விற்பனையை ஒழிக்க உதவுகிறான்

தேசிய போர்முனையின் பிரசாரம்

AAA 1304—C. TM

KALKI—25-3-1945

கம்பர் தரும் காட்சி

டி.கே.சி.



95. குகனும் போயினான்!

பரதனைப் பார்த்து இராமன், "பதினாலு வருஷமும் நீயே ராஜ்யத்தை ஆள வேண்டும்" என்று சொன்னான். இந்த வார்த்தையை வைத்துக் கொண்டு பரதன் ராமனிடம் "பதினாலு வருஷம் முடிந்து நீ வந்து ராஜ்யத்தை ஒப்புக் கொள்ளா விட்டால் அக்கினிப் பிரவேசந்தான் எனக்கு" என்றான். இராமன் சரி என்று ஒப்புக் கொள்ள வேண்டியதாயிற்று. இப்படி ராமனது வாக்கை வாங்கியதில் பரதனுக்கு மனசில் களிப்பே யுண்டாய்விட்டது.

ஆனாலும் பதினாலு வருஷம் பிரிவு என்று நினைத்த மாத்திரத்தில் பரதனுக்குத் தாங்க முடியாத துயரம் வந்து விட்டது!

விம்மினன் பரதனும்
வேறு செய்வதொன்(று)
இன்மையின்; அரிதென
எண்ணி ஏங்குவான்;
'செம்மையின் திருவடித்
தலம்தந்(து) ஈ(க)' என,—
எம்மையும் தருவன
இரண்டும் நல்கினான்.

[விம்மினன் பரதனும் வேறு செய்வது ஒன்று இன்மையின்: போக்கு வேறு இல்லாமல் மறுபடியும் துயரத்துக்கு உள்ளானான்: அரிதென எண்ணி ஏங்குவான்: அடடா! இந்தப் பதினாலு வருஷக் கெடுவை ஒழிப்பதற்கு வழியில்லையே என்று எண்ணி ஏங்குகின்றான்: செம்மையின் திருவடித்தலம் தந்து ஈக என: ராமனைப் பார்த்து உன்னுடைய அழகிய பாதுகைகளை எனக்கு அருள வேண்டும் என்று சொன்னான்: எம்மையும் தருவன இரண்டும் நல்கினான்: மோக்ஷபதவி மாத்திரமல்ல, அதற்கு மேலாக என்ன பதவியிருந்தாலும் அதையும் தரக்கூடிய தன் இரண்டு பாதுகைகளையும் ராமன் கொடுத்து விட்டான்.

குறிப்பு:—ராமனது பாதுகை என்றால் கடவுளின் அருள்த் தத்துவத்துக்கு அடையாளம். அதை உணர்ந்து விட்டால் ஆணவமானது இல்லாமல் நம்மை விட்டுக் கழன்று விடும். அபேதமாய் எங்கும் நிறைந்த இறைவனது சொரூபத்தோடு நாமும் கலந்து விடுகிறோம். இந்தக் கொள்கையைக் கடைசி அடி அருமையாய் விளக்குகிறது.]

பாதுகைகளைத் தந்து விட்டான் ராமன் என்பதை பரதன் உணர்ந்து கொண்டான். அவைகளை அவன் என்ன செய்தான்?

அடித்தலம் இரண்டையும்,
அழுத கண்ணினான்,
முடித்தலம் இவைஎன
முறையிற் சூடினான்,
படித்தலத்(து) இறைஞ்சினன்
பரியிற் போயினான்;—
பொடித்தலம் இலங்குறு
பொலங்கொள் மேனியான்.

[அடித்தலம் இரண்டையும்: பாதுகைகள் இரண்டையும்; அழுத கண்ணினான்: அழுத வண்ணமாய்; முடித்தலம் இவையென முறையிற் சூடுகிறான்: தனக்குரிய கிரீடம் என்ற எண்ணத்துடன் சிரசின்மீது அவைகளை வைத்துப் பொருந்தி நிற்குமாறு அங்கவஸ்திரத்தினால் எப்படிக் கட்ட வேண்டுமோ அப்படிக் கட்டிக் கொண்டான்; படித்தலத்து இறைஞ்சினன்: ராமன் முன்பு பூமியில் சாஷ்டாங்கமாக விழுந்தான்— பிறகு எழுந்து நின்று; பரியிற் போயினான்: மிக்க துயரத்துடனேயே அயோத்

திசையை நோக்கித் திரும்பினான்; பொடித்தலம் இலங்குறு பொலங்கொள் மேனியான்: புழுதிப் படலம் விளங்கும் அழகமைந்த மேனியனாகிய பரதன்.

குறிப்பு: பரதனுடைய கண்ணில் கண்ணீர் பெருகுகிறது. காலில் போட்டு நடக்கிற செருப்பைச் சிரசில் அமையக் கட்டியிருக்கிறது. அந்தக் கட்டோடு நிலத்தில் விழுந்து வணங்குகிறான். இத்தனை விஷயமும் எதைக் காட்டுகிறது? பரதனது உள்ளத்தினின்று ஒளிவிட்டுக் கொண்டிருக்கிற அன்பைத் தான்! அவனது மேனியில் படிந்திருந்த தூசிப்படலத்தின் வழியாக அன்பு பிரகாசிப்பதைக் காண்கிறார் கம்பர். இதைவிட அழகு செய்வதற்கு வல்லது வேறு உண்டா என்று பேசுகிற மாதிரி இருக்கிறது செய்யுளின் சாயல்.]

பரதன் நடந்து போகிறான், புழுதி படிந்த மேனியோடு. அவனுக்குப் பின்பாகத் தாய்மார், சுற்றத்தார், பெரியோர், முனிவர்கள் எல்லாருமே போகிறார்கள்.

ஈன்றவர் முதலிய
எண் இல் சுற்றமும்,
சான்றவர் குழுவொடு
தவத்து ளோர்களும்,
வான்தரு சேனையும்
மற்றும் சுற்றமும்,
மூன்று நால் கிடந்ததோள்
முனியும் போயினான்.

[ஈன்றவர் முதலிய எண்ணில் சுற்றமும்: தாய்மார்கள் முதலான எண்ணற்ற பந்துக்களும்; சான்றவர்: மதிக்கக்கூடிய பெரியோர்; தவத்துளோர்களும்: முனிவர்களும்; வான்தரு சேனையும் மற்றும்: வானத்தின் அடிவாரத்தையே தொட்டு நிற்கின்றனவோ என்று சொல்லும்படியாக அவ்வளவு பெரிய படையும் இதர பரிவாரங்களும்; முனியும் போயினான்: வசிஷ்டரும் கடைசியாக நடந்து போனார்.

குறிப்பு:—ஒரு படத்தைப் பார்க்கிறோம். தூரத்தில் கீழே பாதுகையைச் சுமந்த வண்ணமாகப் பரதன் நடந்து போகக் காண்கிறோம். அடுத்தாற் போல் முனிவர்களும் சேனையும் நடந்து போகிறார்கள். கடைசியாக வசிஷ்டருடைய முதுகையும் நரையும் பூணூலையும் பார்க்கிறோம். இந்தக் காட்சியைச் செய்யுளின் உருவத்திலேயே பொறித்து வைத்திருக்கிறது: 'மூன்று நால் கிடந்த தோள் முனியும் போயினான்.']

பழமையான உயர்ந்த இலக்கியங்களைத் தெரிந்து ராமனுடன் இருந்து அனுபவித்த புலவர் பலர். அவர்களும் போய்விட்டார்கள். மற்ற அயோத்தி நகரத்து மக்களைப் பற்றிச் சொல்லவா வேண்டும்? தேவர்கள் வானத்திலிருந்து வந்திருந்தார்கள் என்று வைத்துக்கொள்ளுவோம். 'நமக்கு ஏது இடம்' என்று அவர்களும் கம்பி நீட்டி விட்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டி வரும்.

பண்டை நூல் தெரிந்துணர்
பலரும் போயினார்,
மண்டுநீர் நெடுநகர்
மாந்தர் போயினார் ;—
விண்டுறை தேவரும்
விலகிப் போயினார் ;—
கொண்டல்நன் ஆணையால்
குகனும் போயினான்.

[தேவர்களுமே போய் விட்டார்கள் என்று சொல்லுவதால் யாருக்குமே அங்கு இஷ்டமில்லை என்பதுதான் பொருள். இது ஒரு அருமையான உத்தி. ஆனாலும், ஒரே ஒருவன் மிஞ்சி நிற்கிறான் — குகன்! அவனை ராமன் பரிந்து பார்த்து 'போய் விடு அப்பா' என்று பலமுறை சொன்ன பிறகு அவனும் போகிறான்.

குறிப்பு: எல்லாரும் போன பிறகும் குகன் மட்டும் போகாமல் நின்றான் என்று அமைத்ததில் குகனுடைய நட்பின் பெருமை சித்திரகூடத்தை விட உயர்ந்து விடுகிறது!]

கடைசியாக நண்பனான குகனையும் அனுப்பியாகி விட்டது. ராமன், லக்ஷ்மணன், சீதை ஆகிய மூவரும் சித்திரகூட பர்வதத்தில் மிஞ்சி நிற்கிறார்கள்.

● ● ●



ஒரு அமெரிக்கன்: லிபிய யுத்தத்துக்காக நாம் அனுப்பிய ஷெர்மன் டாங்கிகளை பிரிட்டிஷார் ஏன் வேண்டாமென்று மறுத்து விட்டனர், தெரியுமா?

இன்னொரு அமெரிக்கன்: தெரியும், தெரியும்! அந்த டாங்கிகளால் பின்வாங்கிச் செல்ல முடியாது; அதனால்தான்!

[அமெரிக்கப் பத்திரிகையில், பிரிட்டிஷ் படைகள் பின்வாங்குவதைப் பரிகசிப்பதற்காக வெளியான ஹாஸ்யம்]

யாரோ பேசுகிறார்........



...இன்றொரு பெண்
விதவையாகிறாள் அல்லது
மகனை இழக்கிறாள்.
ஆனால் அவனை விட தேசந்தான்
மிக நஷ்டமடைகிறது.

தந்தி [illegible] ... தாக கருதுகிறோம் என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவிக்கிறோம்.

[illegible]

இவை எல்லாம் யாரோ ஒருவர் பேசியதால் விளைந்தது

[illegible]

[illegible]



[illegible]

தேசீய போர்முனை வெளியீடு.

AAA 1340 TM

**நீங்கள்
அப்படிச் செய்ய
மாட்டீர்கள்
என்பதை
உறுதிப்படுத்துங்கள்.**

KALKI—25-3-1945

மெட்ரிகுலேஷன் பாஸ் செய்தவர்களுக்கு யுத்த சேவைகள்

இந்திய ஆர்மியில் மனக்கூர்மையுள்ள சிறுவர்களுக்கு நல்ல சந்தர்ப்பங்கள் காத்திருக்கின்றன. நல்ல சம்பளத்தில் இப்பொழுது உத்தியோகமும் யுத்தத்திற்கு பிறகு சௌகரியமான வாழ்க்கையும். சில உதாரணங்கள் இதோ கொடுக்கப்பட்டிருக்கின்றன.

மெட்ரிகுலேஷன் பாஸ் பண்ணினவர்கள் (அல்லது அதற்கு சமமான படிப்புள்ளவர்கள்) அல்லது ஆர்மி படிப்பு பரிக்ஷை தேரக்கூடிய 9/10 ஜமாட்காரர்களும் இன்ஸ்டிருமெண்ட் மெக்கானிக், ரேடியோ மெக்கானிக், வயர்லெஸ் மெக்கானிக்குகளாக இலவச பயிற்சி அடைய இந்திய ஆர்மியில் சேரலாம். டிரெயினிங் சமயம் சம்பளம் மாதம் ரூ. 59/4. டிரெயினிங் பிற்பாடு மாதம் ரூ. 63-ல் ஆரம்பித்து ரூ. 94/14 வரை உயரும். மேலும் யுத்தசேவை செய்பவர்கள் இலவசமாக ரேஷன், துணி, இடவசதி, வைத்திய சிகித்சை, தாராளமான விடுமுறை நாட்கள், சிவிலியன்களுக்கு கிடைக்காத அனேக மதிப்பு வாய்ந்த சலுகைகளையும் பெறுகிறார்கள்.

மெட்ரிகுலேஷன் பாஸ் செய்தவர்கள் மேற்கொண்டு விவரங்களை கேட்கும்படி அழைக்கப்படுகிறார்கள். புத்திசாலியான எந்த சிறுவனும் இந்த சந்தர்ப்பத்தை இழக்க இயலாது.

யுத்தபிற்காலம்? ஆயுதம் தாங்கிய சேவையிலிருந்து யுத்தத்திற்குப் பிறகு அனேக நன்மைகளை அடையலாம் என்பதை மறந்துவிடாதே. பட்டாளத்தில் பெறும் பயிற்சியும் அனுபவமும் லாபகரமான சிவில் வாழ்க்கைக்கு வேண்டிய யோக்யதாம்சங்களை கொடுக்கும் என்பதில் சந்தேகமேயில்லை. தற்காலம் காலியாகவேயிருக்கும் அனேக சர்க்கார் உத்தியோகங்கள் யுத்தத்தில் வேலை செய்தவர்களுக்கு கிடைக்கும். யுத்தம் முடிந்ததும் அனேக யுத்தசேவை செய்தவர்கள் சர்க்கார் சிவில் குறிப்பிட்ட கைத்தொழில்களில் பிரத்தியேக பயிற்சி அடையக் கூடும். தற்சமயம் பலகலைக் கழகத்திலிருக்கும் மாணவர்களுக்கு யுத்தத்திற்குப்பிறகு மதிப்பு வாய்ந்த சலுகைகள் அளிக்கப்படும். அதன்மூலம் அவர்கள் மேற்கொண்டும் படிக்கலாம். இதன் விவரங்கள் பலகலைக்கழக அதிகாரிகளிடம் கிடைக்கும்.

மெட்ரிகுலேஷன் அல்லது அதற்கு சமமான படிப்புள்ள சிறுவர்கள் யுத்தசேவைக்கு விண்ணப்பித்துக்கொள்ள தாமதிக்கக்கூடாது. எல்லா விவரங்களையும் ஏதாவது ரெக்ரூட்டிங் ஆபீஸில் பெறலாம்.

AAA 1589-A-TM



படித்துப் பார்!

கம்யூனிஸ்ட்டுகளும் காங்கிரஸும்

[ஆசிரியர்: பி. ஸி. ஜோஷி; பிரசுரம்: ஜன சக்தி பிரசுராலயம், சென்னை. விலை: 4 அணா: ஆங்கிலத்தில், விலை 6 அணா.]

தீண்டாமையை விலக்குவதை முக்கிய வேலைத் திட்டமாகக் கொண்ட காங்கிரஸ் ஸ்தாபனத்தைச் சேர்ந்த சிலர் இன்று அக் கொள்கையை அரசியலில் புகுத்த ஆரம்பித்து விட்டனர். கம்யூனிஸ்ட்டுகளைக் காங்கிரஸ் சங்கங்களில் சேர்த்துக் கொள்ள மறுக்கின்றனர். இதற்கு அவர்கள் கூறும் காரணம் நாங்கள் சிறையில் இருந்த காலத்தில் கம்யூனிஸ்ட்டுகள் காங்கிரஸின் முதுகில் குத்தி விட்டார்கள் என்பதே. இந்த அபாண்டமான பழிக்குத்தான் ஸ்ரீ ஜோஷி அவர்கள் இச்சிறு புத்தகத்தின் மூலம் சாங்கோபாங்கமாகப் பதில் அளித்திருக்கிறார். காங்கிரஸ்காரர்கள் சிறைப்பட்டதிலிருந்து காங்கிரஸுக்காகவும் தேசத்துக்காகவும் கம்யூனிஸ்ட்டுகள் எவ்வளவு உழைத்திருக்கிறார்கள் என்பதை விரிவாக எடுத்துரைத்திருக்கிறார். ஸ்ரீ ராமமூர்த்தியால் வெகு எளிய நடையில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் இப்புஸ்தகத்தை உண்மையை அறிந்து கொள்ள விரும்புவோருக்கெல்லாம் பலமாகச் சிபார்சு செய்கிறோம்.

வ.உ. சிதம்பரம்பிள்ளை சரித்திரம்

[ஆசிரியர்: பரலி. சு. நெல்லையப்பர்; பிரசுரம்: சக்தி காரியாலயம், சென்னை; விலை: அணா 10.]

வீரத் தியாகியும் விடுதலை வீரருமான ஸ்ரீ வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்களின் சரித்திரம் இவ்வளவு நாட்கள் கழித்தாவது வெளிவந்தது தமிழரின் பாக்கியந்தான். சிங்களம் புஷ்பகம் சாவகம் முதலிய தீவுகள் யாவினும் சென்று தங்கள் பேரும் புகழும் அழியா வண்ணம் தமிழ்க் கொடி நிறுவிய பண்டைத் தமிழர்களின் வீரத்தை மீண்டும் நிலை நாட்டியவர் சிதம்பரம் பிள்ளை. முன் காலத்தில் கப்பல் ஓட்டிக் கடாரத்தை வென்ற தமிழ் நாட்டில், ரோமாபுரிக்கு முத்தும் பவளமும் அனுப்பிய தமிழ் நாட்டில், வெகு காலத்துக்குப் பிறகு மீண்டும் கப்பலோட்டிய வீரத் தமிழர் சிதம்பரம் பிள்ளை. அவருடைய சரித்திரத்தை எழுதுவதற்கு அதே ஜில்லாவைச் சேர்ந்த தேச பக்தரும், தியாகியும், "லோகோபகாரி" பத்திரிகைக்கு வெகு காலம் ஆசிரியரா யிருந்தவருமான ஸ்ரீ பரலி. சு. நெல்லையப்பரைக் காட்டிலும் தகுதி வாய்ந்தவர் யாரும் இருக்க முடியாது.

பக்தி மார்க்கம்

[ஆசிரியர்: சுவாமி பரமானந்தர்; பிரசுரம்: ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை; விலை: அணா 8.]

இந்நூல் சுவாமி பரமானந்தர் அருளிய ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு. பக்தி மார்க்கத்தைக் கடைப்பிடித்துப் பகவானை அடைய வேண்டுமானால் "பக்தி மார்க்கம்" என்னும் இந்நூலைப் படிப்பதைத் தவிர வேறு மார்க்கமில்லை என்று சொல்லும்படி புத்தகம் அமைந்திருக்கிறது.

டாக்டர் ஜயானந்தன்

பகீரதன்

"என்ன சார்! ரொம்ப நாளாகக் கிளப்பு பக்கம் வருகிறதே இல்லை போலிருக்கிறதே" என்று கேட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தார் முதலியார்.

"முதலியார்வாள்! வரவேணும். பத்து நாளாக உடம்பு சௌகரியமில்லை" என்று அலுத்துக் கொண்டார் திவான் பகதூர் தில்லை நாயகம்.

"மன்னிக்க வேண்டும். உங்களுக்கு உடம்பு சௌகரியமில்லை யென்று எனக்குத் தெரியாது. அது இருக்கட்டும். இப்பொழுது யார் வைத்தியம் பார்ப்பது?"

"அவர்தான்; நம்ப டாக்டர் சந்திரசேகரன் தான் பார்த்துக் கொண்டிருக்கிறார்."

"டாக்டர் சந்திரசேகரன் சுகமில்லை; சுத்த கர்நாடக டாக்டர். டாக்டர் ஜயானந்திடம் தங்கள் உடம்பைக் காட்டுங்கள். அவர் நன்றாகப் பார்த்துத் தகுந்த மருந்தாகக் கொடுப்பார்."

"ஜயானந்தமா! அது யார் அது?"

"இப்பொழுதுதான் சீமையிலிருந்து எம். ஆர். ஸி. எஸ். படித்து விட்டு வந்திருக்கிறார். அவர் எல்லாவித வியாதிகளுக்கும் 'ஸ்பெஷலிஸ்ட்.' நீங்கள் நாளைக்கே அவரிடம் சென்று உடம்பைக் காட்டுங்கள்!"



"அப்படியானால், நீங்களும் வாருங்கள். நாளைக்கு நாம் இரண்டு பேருமாகவே டாக்டர் ஜயானந்திடம் போவோம்."

"அதற்கென்ன, பேஷாய் வந்து விடுகிறேன்."

டாக்டர் ஜயானந்தம் எம். ஆர். ஸி. எஸ். திவான்பகதூர் தில்லைநாயகத்தின் உடம்பை வெகுநேரம் பரிசோதனை செய்து பார்த்த பிறகு, அவருடைய இரத்தத்தையும் பரிசோதனை செய்து பார்த்துவிட்டுத்தான் சொல்ல முடியும் என்று சொல்லிவிட்டுப் போனார்.

மறுநாள் ஜயானந்தம் "உங்கள் இரத்தத்தில் ஒன்றும் கெடுதல் இல்லை. ரொம்ப சுத்தமாக இருக்கிறது. பல்லினால்தான் இப்பொழுது உங்களுக்கு வியாதி யெல்லாம். ஆகையால் பல்லை யெல்லாம் பிடுங்கிவிட வேண்டும். நாளைக்கு வாருங்கள்; பல்லில் வலியே இல்லாமல் எடுத்து விடுகிறேன். அப்புறம் உங்கள் உடம்பு சுகமாகி விடும்" என்றார்.

"நாளைக்கு வருவானேன்? இன்றைக்கே எடுத்து விட்டால் போகிறது!" என்று சொல்லித் தான் கட்டி விருந்த பொய்ப் பற்களை யெல்லாம் எடுத்து டாக்டரின் மேஜை மீது வைத்தார் திவான்பகதூர் தில்லைநாயகம்.

பாரதியின் உள்ளம்

ஸ்ரீ சுத்தானந்த பாரதி

எனது நண்பர் விசுவநாத பாரதி தாம் பாரதியாருடன் நெருங்கிப் பழகிய நாட்களில் நடந்த பல சம்பவங்களை எனக்குச் சொல்லியும் எழுதியும் உதவினார். ஐயரும் சொல்லி யிருக்கிறார்.

ஒரு நாள் பாரதியாருக்குக் கொஞ்சம் பணம் வந்தது. "இந்தப் பணத்தை நாம் நூறு நூறு ஆயிரமாக்கப் போகிறோம், பார்!" என்று கவி திருநெல்வேலிக்குச் சென்றார். அங்கே விசுவநாத பாரதியை அழைத்துக் கொண்டு பாலத்தில் அங்குமிங்கும் சுற்றிக் கொண்டே, "ஓய்! இன்று ஒரு பெரிய காரியம் செய்யவேண்டும். ஒரு திட்டம் போடவேண்டும். நம்மிடம் ஒரு தொகை யுள்ளது. அதைக் கொண்டு 'அமுதம்' என்ற பத்திரிகை அச்சிட வேண்டும். அல்லது......" என்று சற்றே தயங்கியபோது, ஒரு பழக்காரி, "தெய்வமே! இன்று எப்படிப் பிழைப்பேன்? ஒன்றும் விற்கவில்லையே" என்று புலம்பிச் சென்றது இவர் காதில் விழுந்தது. பழக்காரி இருபதடி சென்று விட்டாள். "ஓம் சக்தி, அம்மா, பழக்காரி! பழக்காரி!" என்று பாரதியார் அவளைத் துரத்திச் சென்றார். அவளைக் குறுக்கே மறித்து நிறுத்தி, "அம்மா!" இறக்கு, கூடையை. அதென்ன, நாம் இருக்கையில் அப்படிச் சொன்னாய்? உன் பசி நமது பசியில்லையா? கூடையில் எத்தனை பழம் வைத்திருக்கிறாய்?" என்று கேட்டார்.

"சாமி, நல்ல மகராசன்!" என்று அவள் கூடையைத் திறக்கு முன்பே, பாரதியார் அதை மூடியிருந்த துணியைத் தாமே நீக்கி, "அம்மா! நமக்கும் நல்ல பசி. உன் கையாலேயே கொடு" என்று முப்பது பழங்களை அங்கேயே வாங்கி உறிஞ்சி உறிஞ்சித் தின்றார். "ஓய், நீரும் சாப்பிடும்" என்று விசுவநாதருக்கு முப்பது பழங்களை வாங்கித் தந்தார். அவர் மூட்டை கட்டினார். கூடையில் இருபது பழமே மிச்ச மிருந்தது. "அம்மா! 'பாரதி தந்தான்!' என்று மிச்ச முள்ளதை உன் குழந்தைகளுக்குத் தந்து நீயும் சாப்பிடு. தெரியுமா?" என்று சட்டைப் பையி லிருந்து ஆறு ரூபாய்களை எடுத்துப் பழக்காரியிடம் தந்தார். "சாமி! கூட இரண்டு ரூபாய் தந்திருக்கிறீர்களே" என்று பழக்காரி ரூபாயைத் திருப்பித் தந்தாள்.

"உனக்கு எத்தனை குழந்தைகள்?" என்றார் பாரதியார்.

"இரண்டு பெண்கள்."

"நமக்கும் அப்படியே. இந்தா, ஆளுக்கு ஒரு ரூபாய் கொடு! இன்னும் இரண்டு ரூபாயை வைத்துக் கொண்டு நன்றாகப் பிழை" என்று சொல்லிவிட்டு,

"மனிதர் நோக மனிதர் பார்க்கும்
வாழ்க்கை யினியுண்டோ?"

என்று பாரதியார் உல்லாசமாகப் பாடிக் கொண்டே சென்றார்.

★

பிரிட்டிஷ் சிப்பாய் (நிற்கிறவன்):—உன் மடியில் உட்கார்த்தி வைத்துப் பால் கொடுத்துக்கொண்டிருக்கிறாயே, யாரது. உன் மகனா?

பிரிட்டிஷ் சிப்பாய் (உட்கார்ந்திருக்கிறவன்):—இல்லை. இவன் சற்று முன்பு நான் கைது செய்த ஒரு ஜெர்மன் சிப்பாய்!

[ஜெர்மனியில் ஆள் பலம் குறைந்து போய், ஹிட்லர் சிறு பையன்களை யுத்த களத்துக்கு அனுப்புகிறார் என்னும் விஷயத்தை எடுத்துச் சொல்லும் ஒரு கேலிச் சித்திரம். துருக்கி பத்திரிகை யொன்றி லிருந்து எடுத்தது.]


★



அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சித்திரைப் பள்ளிக்கூடம்

•

1945 ஏப்பிரல் மாதம் 20-ம் தேதியிலிருந்து 6 வாரங்கள் வகுப்புக்கள் நடைபெறும். படிப்பை மத்தியில் நிறுத்தியவர்களும், ஏற்கனவே ஸ்கூலில் படிக்காதவர்களும் இவ்வகுப்பில் சேர்ந்து படிக்கலாம். அவசியப் பாடங்கள் குறுகிய கால அளவில் சொல்லிக் கொடுக்கப்படும். தங்க இடமும் படிப்பும் செலவில்லாமல் கிடைக்கும். சாப்பாட்டுச் செலவு சுமார் ரூ. 20/- ஆகலாம். சேர விரும்புகிறவர்கள் ஏப்பிரல் மாதம் 10-ம் தேதிக்குள் பல்கலைக் கழகத்துக்கு மனுச் செய்து கொள்ளலாம்.



உன்னுடைய தற்காலமும்

உன்னுடைய பிற்காலமும்

W.A.C. (I) நேவல் விங்கில் வேலை செய்வது இந்திய பெண்களுக்கு, தங்களது தேசத்தின் பிற்காலத்தையும் அத்துடன் தங்களது பிற்காலத்தையும் நிருவகிப்பதில் ஒரு முக்கியமான பொறுப்பை ஏற்றுக்கொள்ளுவதற்குச் சித்தப் படுத்திக்கொள்ள ஒரு அரிய சந்தர்ப்பத்தை அளிக்கிறது. இந்திய பெண்களிடம் முனைவேற்றமடைந்து தேச சேவையில் மற்றநாட்டு பெண்கள் போல முக்கிய பங் கெடுத்துக்கொள்ளவேண்டுமென்ற எண்ணம் வளர்ந்து வருகிறது. வியாபாரம் கைத்தொழில் இவைகளில் இந்தியா தீவிரமாக முன்னேறிவருகிறது. இது பெண் களுக்கு தேவையான சந்தர்ப்பத்தை அளிக்கிறது. சீக்கிரம் சமாதான மேற்பட்டதும் சிவில் உத்தியோகங்களுக்கு அனேக நன்கு பயிற்சி பெற்ற ஆணும் பெண்ணும் தேவையாய் இருக்கும் என்பது நிச்சயம். நேவல் விங் பயிற்சியும் அதில் அக்கறையுள்ள புது தொழில்கள் செய்வதால் அடையும் அனுபவமும் அனேக பெண் களுக்கு லாபகரமான சிவில் வாழ்க்கைக்கு தேவையான யோக்யதாம்சங்களை கொடுக்கிறது என்பது நிச்சயம்.

அனேக பெண்கள் ஏற்கனவே சேர்ந்திருக்கிறார்கள். ஆனாலும் இன்னும் அனேகர் தேவையாய் இருக்கிறது. இந்தியாவின் மேன்மைவாய்ந்த பாரம்பரியத்துக்கு நீங்கள் அருகதையானவர்கள் என்பதை ருசுப்படுத்த இது ஒரு நல்ல சந்தர்ப்பம்.

பூரா விவரங்களுக்கும் ஏதாவது ஒரு ரெக்ரூட்டிங் ஆபீஸ், அல்லது சமீபத்திலுள்ள W.A.C. (I) நேவல் விங் யூனிட் காமாண்டர் அல்லது துறைமுகப் பட்டணத்திலுள்ள நேவல் ஆபீசருக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்.

W·A·C(I)

நேவல் விங்கில்

சேருங்கள்

AAAI4TM

KALKI — 25-3-1945

காட்டுப் பள்ளிக்கூடம்

நாடோடி

நான் சிறு பையனாக இருந்த காலையில் என் தம்பி ஒரு தடவை வியாதியாய் விழுந்து விட்டான். அப்பொழுது அவனுக்கு நடந்த ஆசார உபசாரங்கள் சொல்லி முடியாது. எப்பொழுது பார்த்தாலும் அம்மா அவன் பக்கத்திலேயே உட்கார்ந்து கொண்டிருப்பாள். தினம் சாயந்திரம் ஆபீஸிலிருந்து வரும்பொழுது அப்பா அவனுக்கென்று டஜன், டஜனாக சாத்துக்குடி வாங்கிக் கொண்டு வருவார். காலையிலும், மாலையிலும் தம்பியைத் தேடிக்கொண்டு டாக்டர் வருவார். இன்னும் பக்கத்து வீட்டுக்காரர்கள் எல்லாம் தினம் சாயந்திரம் அவனைப் பார்க்க மாடிக்குப் போவார்களே யொழிய என்னோடு ஒரு வார்த்தைகூடப் பேச மாட்டார்கள்.

அப்பொழுது நான் என் தம்பியைப் பார்த்துக் கொண்ட அசூயை கொஞ்சம், நஞ்சமல்ல. "தம்பி அதிர்ஷ்டக்காரன். அது தான் அவனுக்கு வியாதி வந்தது. எல்லாரும் அவனைக் கவனிக்கிறார்கள். ஐயோ! தம்பிக்கு வந்ததுபோல் நமக்கும் வியாதி வராதா!" என்று அந்தக் காலத்தில் இப்படியெல்லாம் வருத்தப் பட்டிருக்கிறேன்.

கிட்டத்தட்ட இதைப்போலவே, திக சென்ற பத்து நாட்களுக்கு முன்பு ஒரு நாள், "ஐயோ! நாமும் ஒரு ஹரிஜனாகப் பிறக்காமல் போய் விட்டோமே" என்று நான் வருத்தப்பட நேர்ந்தது.

ஹரிஜன் அல்லாதானாகிய என்னை இத்தகைய வருத்தத்தில் ஆழ்த்த வேண்டும் என்பதற்காகவே செய்தது போல் நண்பர் ஸ்ரீ சாம்பசிவம் என்னை மாயனூருக்கு அழைத்திருந்தார். மாயனூரில் அவர் சூப்பரண்டாக இருந்து நடத்தி வரும் இந்திய ஊழியர் சங்க விவசாயப் பள்ளிக் கூடத்தின் (அப்பா! கூட்ஸ் வண்டி மாதிரி எத்தனை நீளப் பெயர்! பெயர் வாயில் நுழையாமல்தான் அந்தப் பக்கத்தில் உள்ள கிராம ஜனங்கள் அதைக் 'காட்டுப் பள்ளிக்கூடம்' என்னும் சுலபமான பெயரால் அழைக்கிறார்கள் போலும்! நாமும் அப்படியே அழைப்போம்.) வருஷாந்தர விழாவுக்கு நானும் அசட்டுத்தனமாகப் போய்ச் சேர்ந்தேன்.

இந்திய ஊழியர் சங்கத்தைச் சேர்ந்த ஸ்ரீ கே. ஜி. சிவஸ்வாமியால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இப்பள்ளிக் கூடத்தைத் தற்சமயம் ஸ்ரீ சாம்பசிவம்தான் முழுப் பொறுப்புடன் நிர்வகித்து வருகிறார். சுமார் அறுபது ஹரிஜனச் சிறுவர்கள் இங்கேயே சாப்பிட்டு வசித்து வருகிறார்கள். அவர்களுக்கு இலவசச் சாப்பாட்டுடன் இலவசக் கல்வியும் கொடுக்கப்படுகிறது. விவசாய சம்பந்தமான எல்லா விஷயங்களும் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன.

சாகுபடி வேலை தெரிய வேண்டுமா? இதோ, அதற்கு ஒரு வாத்தியார். மாடு வளர்க்கத் தெரிய வேண்டுமா? இதோ, அதற்கு ஒரு வாத்தியார். கோழி வளர்க்கத் தெரிய வேண்டுமா! இதோ, அதற்கு ஒரு வாத்தியார். இப்படியாக ஒவ்வொன்றுக்கும் ஒரு வாத்தியார் இருக்கிறார்.



மாயனூர் ஸ்ரீ சாம்பசிவம்

இத்தனை வாத்தியார்களிலும் எனக்கு மிகவும் பிடித்தவர் கோழி வாத்தியார்தான். ஏனெனில் இந்தக் கோழி வாத்தியார், கோழி வளர்ப்பில் கெட்டிக்காரரோ, என்னமோ, காப்பி போடுவதில் படு கெட்டிக்காரராக இருக்கிறார். நான் "காப்பி" என்று சொல்ல வேண்டியதுதான் தாமதம், உடனேயே சுவரில் மின்சார 'பிளக்'கை

மாட்டி விடுவார். கால் மணி நேரத்தில் காப்பி ஆகி விடும்.

இந்தப் பள்ளிக்கூடத்தில் ஹரிஜன் அல்லாத வாத்தியார்கள் ஹரிஜன மாணவர்களோடு பழகும் விதத்தைப் பார்த்த பிறகுதான், "ஐயோ! நாமும் ஒரு ஹரிஜனனாகப் பிறக்காமல் போய் விட்டோமே" என்று நான் வருத்தப்பட்டேன். இங்குள்ள மாணவர்களை வாத்தியார்கள் அத்தனை அன்புடன் நடத்துகிறார்கள். வருஷாந்தர விழாக் கொண்டாட்டத்துக்குத் தலைமை வகித்த ஸ்ரீ பூவராக அய்யங்கார் இது விஷயத்தை மிகவும் பாராட்டிப் பேசினார்.

சாயந்திரம் நடந்த வருஷாந்தரக் கொண்டாட்டத்தில் ஸ்ரீ சாம்பசிவம் தம் மாணவர்களைப் பிரமாதமாகச் சிலாகித்துப் பேசியபோது எனக்குக்கூட முதலில் சகிக்கவில்லை. ஆனால் அன்று இரவு நடந்த நாடகங்களைப் பார்த்தபோது, அந்தப் பள்ளிக்கூட மாணவர்களை எவ்வளவு புகழ்ந்தாலும் தகும் என்று பட்டது.

பள்ளிக்கூடக் கட்டிடங்களுக்கு நடுவே மாணவர்களும், வாத்தியார்களும் சேர்ந்து ஒரு அழகான நாடக மேடை நிர்மாணித்திருந்தார்கள். இரவு 9-30 மணிக்கு ஆரம்பித்த நாடகங்களைப் பார்ப்பதற்காக, பக்கத்துக் கிராமங்களிலிருந்தெல்லாம் கிராமவாசிகள், ஆண்களும், பெண்களும் கூட்டம் கூட்டமாக வந்திருந்தனர்.

அன்று மாணவர்களும், வாத்தியார்களும் சேர்ந்து நடித்த நாடகங்கள் எல்லாம் அங்கே உட்கார்ந்திருந்தவர்களின் சிந்தனையைத் தூண்டுவனவாக இருந்தன. பொதுவாக ஹரிஜன் அல்லாதார் ஹரிஜனங்களை நடத்தும் சீர்கேடான முறையைப் பற்றியும், இன்னும் நாட்டு மக்கள் ஏழை எளியவர்களை படுத்தும் பாட்டைப் பற்றியும் நாடகங்கள் இருந்தன.

இவற்றில் ஒரு நாடகம் என் சிந்தனையை மிகவும் கவர்ந்தது.

ஐந்தாறு பண்ணையாட்கள்; பசிக்கு உணவின்றிக் கஷ்டப்படுகிறார்கள். அப்பொழுது ஒரு கிறிஸ்தவப் பாதிரியார் அவர்களைக் கிறிஸ்தவராக்குவதற்காக என்னென்னமோ முயற்சி செய்து பார்க்கிறார்.

"இயேசு கிறிஸ்து வருவார்
இன்னும் கொஞ்சம் காலந்தான்"

என்று பாடியும் பார்க்கிறார். ஆனால் அந்த ஹரிஜனங்கள் இதற்கெல்லாம் மசியவில்லை. இதற்கு அடுத்த காட்சியில் வரும் படித்த ஹரிஜனனும் இவர்களுக்கு உதவி செய்ய மறுக்கிறான். வேறு வழியின்றி இவர்கள் தங்கள் பண்ணைக்காரரிடம் போகிறார்கள். பண்ணைக்காரர், "போடா, சண்டாளப் பயல்களா!" என்று கடிந்து கொள்கிறார். அப்பொழுது சண்டாளர்களில் ஒருவன் கவி நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை பாடியுள்ள "தாயை இகழ்ந்தவன் சண்டாளன், தந்தையை நொந்தவன் சண்டாளன். ஒட்டைக் குடிசையில் வாழ்கின்றேன். ஒரு பாவமும் அறியாத நானோ சண்டாளன்?" என்ற பாட்டை வெகு உருக்கமாகப் பாடுகிறான். இந்தப் பாட்டைக் கேட்டு வேதியரும் மனம் உருகி, தம் பண்ணையாட்களைத் தழுவிக் கொள்கிறார். எல்லாருமாகச் சேர்ந்து வேலை செய்து, கிடைத்ததைச் சமமாகப் பங்கிட்டுக் கொள்வது என்று தீர்மானிக்கிறார்கள்.

இந்தப் பாட்டைப் பாடிய நண்பர் பாலகிருஷ்ணன் வெகு உருக்கமாகப் பாடுகிறார். பாரதி பாடல்கள், நாமக்கல் கவி பாடல்கள் எல்லாம் இவருக்குப் பொட்டை நெட்டுரு.

அன்று நடந்த நாடகங்களில் பங்கெடுத்துக் கொண்டவர்களிலே இரண்டு பேரை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். பழைய மாணவரான மயில்ராஜ் என்னும் ஹரிஜன இளைஞரும், மகாதானபுரம் வாலிபர் சங்க வாசகசாலையின் காரியதரிசி ஸ்ரீ கெ. பி. ராஜூ அவர்களும், அநேக வேடங்களில் வந்து ஒவ்வொரு வேடத்திலும் சிறப்பாக நடித்தார்கள்.

லாரல் ஹார்டியைப்போல் இவ்விருவரும் எப்பொழுது பார்த்தாலும் ஒன்றாகவே சேர்ந்து இருக்கிறார்கள். இவர்கள் இருவரும் சேர்ந்து கடைசியில் நடத்திய சர்க்கஸ் கூத்தைப் பார்த்துச் சிரித்துச் சிரித்து எங்கள் வயிறு புண்ணாகி விட்டது.

இக்காட்டுப் பள்ளிக்கூடத்தை இத்தனை சீரும், சிறப்புமாகச் சென்ற பன்னிரண்டு வருஷகாலமாக நடத்தி வரும் நண்பர் சாம்பசிவத்தை இந்திய ஊழியர் சங்கத்தில் சேர்த்துக்கொள்ள மறுத்து விட்டார்களாம். அதில் அங்கத்தினராவதற்கு முன்பே இத்தனை பெரிய ஊழியராக இருக்கும் இவர், இன்னும் அங்கத்தினராக வேறு ஆகிவிட்டால் இந்தியா தாங்காமல் போய் விடும் என்று பயந்து விட்டார்கள் போலும்!

ஒவ்வொருவருக்கும் உகந்த ஒரு

கோத்ரெஜ் ஸ்நாந சோப்

சாவி மார்க்

எல்லோரும் கோத்ரெஜ் ஸ்நாந சோப்புகளை விரும்புவதற்கு காரணம் அவை பல் வேறு ரகங்களில் கிடைப்பதுதான். இயற்கையின் சிங்காரப் பொருட்களான, நன்மை அளிக்கும் தூய, தாவர எண்ணெய்களிலிருந்தும், மூலிகைகளிலிருந்தும் மாத்திரமே செய்யப்பட்ட இந்த சிறந்த ஸ்நாந சோப்புகள், 25 வருட காலமாக, நம் நாட்டின் பரம்பரை சொத்துகளான மேனி அழகையும், தூய்மையையும் பாதுகாத்து வர உதவியிருக்கின்றன. தாவர எண்ணெய்களிலிருந்து மாத்திரம் சோப் செய்யும் முறையில் நாங்கள்தான் வழிகாட்டிகள்; மேலும், சிறந்த ஸ்நாந சோப்புகள் மிருகக் கொழுப்பிலிருந்தல்லாது, தேர்ந்தெடுக்கப்பட்ட தாவர எண்ணெய்களிலிருந்து மாத்திரம் தான் செய்ய வேண்டுமென்பதையும் முதலில் உணர்ந்தவர்கள். இந்திய மூலதனம் கொண்டு, இந்தியர்கள் நிர்வகிக்கும் தொழிற் சாலையில், இந்திய தொழிலாளர்களால் செய்யப்பட்ட இந்த சுதேசி சோப்புகள், நம் நாட்டிலும் வெளி நாடுகளிலும் புகழடைந்திருப்பதும், வெளி நாட்டு சோப்புகளைவிட குணத்திலும், ஆதாயத்திலும் சிறந்திருப்பதும், நமக்கு கௌரவமளிக்கிறது. எங்கும், எப்பொழுதும் செய்யப்பட்டுள்ள ஸ்நாந சோப்புகளில் சர்வோத்தமமான இந்த சோப்புகளிலின்றும், உங்களுக்குகந்ததை தேர்ந்தெடுத்து, உண்மை இந்தியரைப்போல் மேனியை தூய்மையாகவும் பரிமளமாகவும் வைத்திருங்கள்.



ந. 1 ந. 2



'வத்னி'



டர்கிஷ் பாத் பாமெலீ



ஸாண்டல் விம்டா கஸ்



ஷேவிங்ஸ்டிக்கும் ரவுண்டும்

கோத்ரெஜ் சோப்ஸ், லிட். — மதராஸ் (164, பிராட்வே); கோயமுத்தூர் (3, தாமஸ் தெரு)



சிறந்ததை விரும்பும் சகலருக்கும்

நறுமணம் கமழும் சிகரெட்டை விரும்புவோர் டிலக்ஸ் டெனுரை வரவேற்பார்கள். சிகரெட்டின் நறுமணத்தின் உயர்நிலையை டெனுர் சிகரெட் அடைந்திருக்கிறதென அதை உபயோகிப்பவர்களால் கருதப்படுகிறது. உத்தரவாதமுள்ள 100% பொருக்கின வர்ஜீனியா புகையிலை இந்த சிகரெட்டுகள் செய்வதில் உபயோகப்படுவதே இதை எல்லாரும் விரும்புவதற்கு முக்கிய காரணம்.


டி லக்ஸ் டெனுர் சிகரெட்டு
ஜேம்ஸ் கார்ல்டன் லிட், லண்டன்

tenor

Is truly a de Luxe Cigarette

JAMES CARLTON LTD. LONDON.


கல்கி



KALKI மார்ச் 25, 1945 4 அண


தாய் சொல் மிக்க
வாசகமில்லை
லோத்ரா
கர்ப்பாசயரோக
நிவாரணி
கேசரி குடீரம் லிமிடெட், மதராஸ்

Regd. No. M. 4392



SRVS
LTD

ரயிலிலிருந்து, பாஸஞ்சர், லக்கேஜுகள் பார்ஸல்கள், கூட்ஸ்கள் முதலிய சாமான்களை எடுத்து வரவோ, அல்லது வெளியூர்களுக்கு அனுப்பவோ நீங்கள் சிரமப்பட வேண்டாம்.

விவரங்களுக்கு எழுதுங்கள் :

ஸ்ரீ ராம விலாஸ் சர்வீஸ் லிமிடெட்

மதராஸ் & தென் மராட்டா ரயில்வேக்கு லோகல் டெலிவரி கண்ட்ராக்டர்கள்

202-3, மவுண்டு ரோடு :: போன் : 8536 :: மதராஸ்

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras.